|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 14 குரோதி ஸூ தை – மாசி மீ பிப்ரவரி 2025 இதழ் 2



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின்
சார்பில் வெளியிடுவோர் :
ஸ்ரீ காமகோடி கோஸ்தானம்




# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## தை – மாசி

மலர் 14 | பிப்ரவரி 2025 | இதழ் 2


## பொருளடக்கம்


ப்ரார்த்தனை 3

ஆசிரியர் பக்கம் 4

தெய்வத்தின் குரல் 6

பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

நீதிக் கதைகள் 8

பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

அனுக்கிரஹ பாஷணம் 10

பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகள் 12

ஸ்ரீ பாதஸப்ததி 13

வேதாந்த ஸம்வத்ஸ்ரம் 16

வேத ஸூக்தங்கள் 17

தெய்வமும் பௌருஷமும் 19

மாசி மாத விசேஷ தினங்கள் 22

அநுகீதாபர்வம் 23

முகாம் நிகழ்ச்சிகள் 25

சுகநாஸ உபதேசம் 31

ஆச்சார்ய பரம்பரை 35

பெண்கள் தெரிந்து கொள்ள 38

மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ 41

கற்பின் சிகரங்கள் பேசினால் 43

ப்ரபோத சிந்தாமணி 46

முக ஸாரம் 47






भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


**நிர்வாகக் குழு**

ஸ்ரீ K. ஐயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்



## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

**கௌரவ தலைமை ஆசிரியர் :**

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

**ஆசிரியர் குழு :**

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

**வெளியிடுவோர் :**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

**அலுவலக முகவரி :**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 – 27233115

**மின் அஞ்சல் :**
kamakotipradeepam@gmail.com

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

***ஸ்ரீ சம்போ மயி கருணா சிசிராம் த்ருஷ்டிம் திஸன் ஸுதாவ்ருஷ்டிம்***
***ஸந்தாபமபாகுரு மே மந்தா பரமேஸ தவ தயாயா: ஸ்யாம் ॥***

*ஹே சம்போ ! கருணையினால் குளிர்ந்த உமது பார்வையை என்னிடம் கொடுத்தல் மூலம் அமிர்த வரத்தை உண்டு பண்ணி என்னுடைய மூன்று விதமான தாபத்தையும் போக்க வேண்டும். அவ்விதம் செய்தால் ஹே பரமேஸ்வர ! உமது தயையை நான் அறிந்தவனாக ஆவேன்.*

***அவஸீதாமி யதார்திபி: அனுகுணம் இதமோகஸோமஹஸாம் கலு மே***
***தவஸன்னவஸீதாமி யதந்தகஸாசன் ந தத்தவானிகுணம் ॥***

*துக்கங்களை அனுபவித்து பாபங்களுக்கு இருப்பிடமான எனக்கு இது தகுந்ததே. யமனை அழித்தவரே ! உமது பக்தனாக இருந்து கொண்டு நான் இன்னல்களை அனுபவிப்பது உமது மகிமைக்குத் தகுந்தது அல்ல.*

*[ஸ்ரீதர அய்யாவாளின் ஆர்த்திஹர ஸ்தோத்ரம்]*

*புல்வாயின் முன்னர்ப் புலிப்போத்தென என்முன் போந்து நின்ற*
*கல்வாய் மனத்தரைக் கண்டஞ்சினேனைக் கடைக் கணிப்பாய்*
*அல்வாய் மணிமிடற்று ஆரமுதே அருள் ஆன்ற பெருஞ்*
*செல்வா வயித்திய நாதா அமரர் சிகாமணியே*
*இருள் போன்ற கரிய நஞ்சினை மிடற்றில் அமுதம் போன்று கொண்டு விளங்கி அருள்புரிந்த பெரும் செல்வா வைத்திய நாதா! தேவர்கள் தலைவா மானின் முன் புலியானது நின்றார் போன்று கல்மனம் உடைய மனத்தவர் நிற்பதனைக் கண்டு அஞ்சினேன். என்னைத் தேவரீர் கடைக்கண்ணால் நோக்கி எனக்கு அண்மையர் ஆகிக் காத்தருள்க.*

*[ திரு அருட்பா]*

# ஆசிரியர் பக்கம்

***மினிமலிசம்***

*தற்போது இந்த வார்த்தை ப்ரபலமாக உள்ளது. இந்த வார்த்தை முதலில் கலை இலக்கியம் போன்ற துறைகளில் பயன்பட்டு வந்தது. தற்போது பொருளாதாரம் தனிமனிதன் வாழ்க்கை முறைக்குப் பயன்பட்டு வருகிறது.*

*இதன் பின்னணி என்ன? 1980 களில்* consumerisam *என்று ஆரம்பித்து தாராளமயமாக்கலில் உலகப் பொருளாதாரம் செல்ல ஆரம்பித்தது.*

*விளைவு சுமார் பத்து வருடங்களில் பூதாகரமான பண வரவு தோன்றியது. குறிப்பாக ஐ. டி செக்டாரில் இளைஞர்களின் கையில் பண மழை கொட்டியது. அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கண்டதே காக்ஷி கொண்டதே கோலம் என்று அவர்கள் விபரீதமான பழக்கங்களைக் கொண்டு சீரழிந்தனர். இப்படி பல வருடங்கள் ஓட தற்போது இது சரியல்ல என்று ஒரு சாராருக்குத் தோன்றி மினிமலிசம் என்று கூறவும், கடைபிடிக்கவும் ஆரம்பித்துள்ளனர். மினிமலிசம் என்றால் என்ன? 'தேவையான அளவுக்கு செல்வத்தை வைத்துக் கொள்ளல்' என்று பொருள்.*

*இந்த சித்தாந்தம் ஒன்றும் புதியது அல்ல. நமது ரிஷிகள் கூறியது, செய்து காட்டியதுதான். அவர்கள் இதை **'அபரிக்ரஹம்'** என்று கூறுவர். வள்ளுவர் **'வேண்டாமை எனும் விழிச்செல்வம்'** என்பர். பதஞ்சலி முனிவர் தனது யோக சாஸ்த்ரத்தில் இதை வலியுறுத்துவார். மகாத்மா காந்தி ஈசாவாஸ்ய உபனிஷத்தை மேற்கோள் காட்டி இதை வலியுறுத்துவார். தர்ம சாஸ்த்ரங்கள் அனைத்தும் தேவைக்கு அதிகமான பொருள் திருட்டுக்குச் சமம் என்று கூறும்.*

*மகா பெரியவா இதைப் பற்றி விஸ்தாரமாகக் கூறியதில் சிலவற்றைப் பார்ப்போம்.*

*'' நமக்காக ஸம்பாதனம் செய்து கொள்வது, செலவழித்துக் கொள்வது இரண்டிலும் ரொம்ப கணக்காயிருப்பதுதான் இதற்கு அடிப்படை. இதைத் தான் அபரிக்ரஹம் என்பது. பரிக்ரஹம் என்றால் உடமைகளைச் சேர்த்துக் கொள்வது. அப்படிச் சேர்த்துக் கொள்ளாமலிருப்பது 'அபரிக்ரஹம்' இதை யோக ஸாஸ்த்ரத்தில்*

*பதஞ்சலி நாம் கைக் கொள்ள வேண்டிய ஐந்து யமங்களில் ஒன்றாகக் கூறுகிறார். மனுவும் அஸ்தேயம் திருடாமையை அபரிக்ரஹமாகவே கூறுகிறார்.*

*கீதையில் பகவான் லோக வாழ்க்கைக்குத் தேவையானவற்றைப் பெறுகிற மனிதன் அவற்றை அவர்களுக்கு அர்ப்பணிக்காமல் அனுபவித்தால் அதுவே திருட்டு என்கிறார்.*

*[3 அத் 11]*

*நம்முடைய ஆசார்யாளும் விவேக சூடாமணியில் யோகத்தின் முதல் வாசல் மௌனம் என்று கூறிவிட்டு அடுத்ததாக அபரிக்ரஹத்தையே கூறுகிறார். **'யோகஸ்ய ப்ரதமம் த்வாரம் வாங்க்னிரோதோ அபரிக்ரஹ:'** பணம் என்ற ஒன்று இல்லாத நாளில் பண்டமாற்று முறை இருந்த போது அபரிக்ரஹம் இயல்பாயிருந்தது. பணம் வந்த பிறகு அதை பாங்கில் போடுவது, வட்டிக்கு விடுவது என்று ஆரம்பித்து விபரீதமாயிற்று.*

*நாலைந்து தலைமுறை மக்கள் எப்படியிருந்தார்கள் என்று பார்த்தால் போதும். மண்பானை, கல் சட்டி, ஓலை, பாக்குப்பட்டை இது தான் அவர்கள் சொத்து. கருகமணிதான் நகை. பர்ணசாலைதான் அரண்மனை. இவைகளை உடைமையாக வைத்துக் கொண்டே நல்ல வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார்கள்.*

*நாம் வேண்டாத லக்ஷுரிகளால் சீரழிந்து நிற்கிறோம். காந்தியும், வினோபாவும் இப்படி நடத்திக் காட்டினர். அவர்கள் வழி வந்தவர்கள் அதற்கு ஆபோசிட் வழியில் போகிறார்கள். நானும் அபரிக்ரஹமாய் எனக்கு பொன்னாடை போர்த்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.*


*ஸனாதன தர்மம் தான் சாஸ்வதம். வழி காட்டுவதும் அதுதான். ஜனங்கள் வாழ்க்கையின் அம்சங்கள் எல்லாவற்றிலும் ஓரளவுக்கு கணக்காயிருந்து நிம்மதியும் பரமார்த்திகமான ஸ்ரேயசை அடைய வேண்டும். மகா பெரியவா சொன்னதை விட நாம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. அவர் கூறியதை நினைவில் கொள்வோம்.* Maximum minimalisam *கடைபிடிப்போம் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்கள் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.*

***ஜய ஜய சங்கர! ஹர ஹர சங்கர !***

# தெய்வத்தின் குரல்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## தேசக் கொடியில் தர்ம சக்கரம் இடம் பெற்றதன் உட்காரணம்




நாம் கருத்துச் செலுத்தாவிடினுங்கூட, நாம் அறியாமலே அந்த ஈசனே தான் தனது தர்ம சக்கரம் நமது சுதந்திர நாட்டின் புதிய கொடியில் மத்திய ஸ்தானம் பெறச் செய்திருக்கிறாரென்றே தொடங்கினோம். நாமறிந்த அளவில், செல்வாக்குப் பெற்ற நவீனக் கொள்கைத் தலைவர்கள் தாம் சுதந்திர பாரதக் கொடியின் அமைப்பை வகுப்பதிலும் முக்கியம் பெற்றவர்கள். அவர்கள் உலகவியல் முன்னேற்றத்தையே பெரிதாகக் கருதுபவரெனினும், நல்லொழுக்கம், தியாகம், தீரம் ஆகியவற்றில் மிக்கவர்கள். தேசாபிமானம் என்று தங்களுக்குத் தோன்றும் ஒன்றில் தன்நலம் மறுத்துப் பற்றுதல் கொண்டவர்கள். அவர்கள் தெய்வ சம்பந்தமில்லாத நன்னெறிக் கோட்பாட்டை தர்மமாகக் கருதுபவர்கள். அத் தர்மத்தை நாட்டுப் பிரஜைகள் யாவரும் பற்றி ஒழுக வேண்டும் என்பதே தமது கொள்கை என்பதைக் காட்டும் முகமாக நமது கொடியில் ஒரு புராதனச் சின்னம் நடுநாயகமாக இடம் பெற வேண்டுமெனக் கருதினர். அவ்விதத்தில்தான் தற்போது நமது கொடியின் நடுவில் தர்ம சக்கரம் இடம் பெற்றிருப்பது.

தற்காலத்தில் நமது நாட்டில் வழங்காதது என்றே சொல்லக்கூடிய - தெய்வ சம்பந்தமற்ற - ஒரு பெருமதத்தின் சின்னம் என்பதாலேயே 'மதச் சார்பற்றவர்'களாகக் கருதப்படக்கூடிய அத்தலைவர்கள் இத் தர்ம சக்கரத்தை தேர்ந்தெடுத்தனர் என்றாலும் சாரநாத்திலுள்ள ஸ்தம்பத்தில் இடம் பெற்றுள்ளதான இச்சின்னம் சரித்திரப் பிரசித்தி பெற்றவரும், சாஸனம் தோறும் தம்மை **'தேவாநாம் பிரியன்'** - 'தேவர்களுக்குப்

பிரியமானவன்' - என்று தெரிவித்துக் கொண்டவருமான அசோகச் சக்கரவர்த்தியுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் நம்மெல்லோருக்கும் பெருமையூட்டுவதேயாகும். ஆயினும் பகவானைப் புறக்கணித்து 'அறநெறி மட்டுமே' என்ற நடைமுறைச் சாத்தியமற்ற தர்மம் குறித்துக் குறைபாடும் தெரியவே செய்கிறது. தனது உலக இராஜ்யத்தில் தர்மம் என்ற சட்டத்தை விதித்து நடத்துபவனாகவும், அதனைப் பின்பற்றுவோர்க்கு நலன்கள் வழங்குபவனாகவும், அல்லாதாரைத் தண்டிப்பவனாகவும், அவர்களுக்குப் பிறவிகளை உண்டாக்கும் ஓர் உயிருள்ள ஈசனைக் காட்டி அவனிடம் பிரியம், பயம் இரண்டுங் கலந்த பக்தி என்பது சுபாவமாவது தன்னியல்பாகப் பிறக்கச் செய்தாலே பொதுஜன சமூகம் தர்மம் என்ற ஒழுங்குமுறைக் கோட்பாட்டைப் பின்பற்றும். இந்த யதார்த்த உண்மையை மறந்து அறநெறியை மட்டும் போதித்த அம்மதம் நடைமுறையில் பயன் தரவில்லை. அம்மதம் பெரியோர்களும் சிறிது காலத்திலேயே நாடெங்கிலுமிருந்த அவர்களது சங்கத்தின் அலங்கோலப் போக்கிலிருந்து இவ்வுண்மையைக் கண்டு தெளிந்தனர். அதன் விளைவாக அவர்கள் தம் மத ஸ்தாபகரையே அந்த ஈசனின் இடத்தில் வைத்து ஹிந்துக்கள் தங்களது கடவுளருக்கு எழுப்பியதை விடவும் மிகப் பெரிய பிம்பங்களும், ஆலயங்களும் அவருக்குச் அமைத்து வழிபட்டு மந்திராதி ஆகமங்களும் வகுத்தனர். அதோடு ஹிந்துமத தேவதா கணங்களையே நேராகவோ தழுவலாகவோ தமது மதத்திலும் இடம் பெறச் செய்தனர். தெய்வ சம்பந்தமற்ற தர்மத்தைத் தனது இராஜ்யத்தில் பரப்பியதாக இன்றைய சீர்திருத்தவாதத் தலைவர்கள் கருதும் அசோகச் சக்கரவர்த்தியும் தம்மைத் 'தேவர்களுக்குப் பிரியமானவன்' என்ற விருதினாலேயே தெரிவித்துக் கொள்வதும் அம்முறையில்தான். இதைக் கவனியாது, அம்மத ஸ்தாபகர் அம்மதத்தின் மூல உருவத்தை தெய்வ சம்பந்தமில்லாததாகக் கூறி, அதைத் தமது 'தர்ம சக்கரப் பிரவர்த்தனம்' (ஸம்ஸ்கிருதத்தின் திரிபு மொழியான பாலியில் **தர்ம சக்கரப் பிரவர்த்தனம்')** என்ற பிரசித்தமான வாக்குத் தொடரால் குறிப்பதை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கொடி நடுவில் சக்கரத்தைப் பொறிக்கச் செய்துள்ளனர்.

அந்த வாக்குத் தொடருக்குப் பொருள் 'தர்மமாம் சக்கரத்தை நன்கு சுழன்றோடச் செய்தல்', அதாவது 'அம்மதக் கோட்பாடுகளை நாற்றிசையும் பரப்புதல்' என்பதேயாகும். எப்படியாயினும் சுதந்திர பாரதத்தில் அறநெறி நன்கு பரவித் தழைக்குமாறு அரசாங்கம் பாடுபடும் என்ற உயர்ந்த இலட்சியத்திற்கு உருவகமாகவே தர்மசக்கரம் தற்போது கொடி நடுவில் பொறிக்கப்பட்டுள்ளதென்பது அம்மட்டில் மகிழ்ச்சிக்குரியதே.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**



## ஹிந்து கலாசாரம்

உலகில் அனேக நாடுகள் இருக்கின்றன. ஒவ்வொரு நாட்டு மக்களுடைய பழக்க வழக்கங்களும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கும். இதைத்தான் கலாசாரம், பண்பாடு என்பார்கள். கடவுளைக் கும்பிடும் முறை, உணவு உட்கொள்ளும் முறை, பெரியோர்களிடம் மரியாதையாக நடந்து கொள்ளும் முறை ஆகியவை போன்ற ஒவ்வொரு செயலும் நாட்டுக்கு நாடு, தேசத்திற்கு தேசம், மக்களுக்கு மக்கள் வெவ்வேறு மாதிரி இருக்கும். இத்தனை கலாசாரங்களுக்கும் மூலமாகவும், முதலாகவும், தாயாகவும் விளங்கக் கூடியது நம்முடைய பாரத கலாசாரம்.

கடவுளை, உருவம், அருவம், கிராம சக்தி போன்ற பல தன்மைகளில் வழிபடுவது நம்முடைய பாரத தேசத்திற்கே உரித்தான ஒன்றாகும். ஓர் உருவம் பல உருவமாக இருந்து அருள் செய்வதும் நமது இந்து கலாசாரத்தின் தனிப்பெரும் விசேஷமாகும்.

உணவு உட்கொள்ளும் முறையில், பூமியிலே உட்கார்ந்து சாப்பிடுவது, இலையில் சாப்பிடுவது, சாத்வீகமான பலவகை உணவுகளை உட்கொள்வது என்பது இந்து கலாசாரத்தின் தனிப்பெரும் விசேஷ மாகும்.

நாம் நமது தாய், தந்தை, ஆசிரியர், வயதில் மூத்தவர், வயதில் இளையவர், சகோதரிகள் முதலியவர்களை வணங்கும் முறைகள் பலவகைப்பட்டு இருந்தாலும் அடிப்படையில் நம்முடைய கலாசாரம் ஒன்று தான். இதில் நமக்குப் பெருமையுண்டு.

இந்தியாவில் பல பகுதிகள் இருக்கின்றன. அவற்றில் ஒவ்வொரு பகுதியும் தனி சீதோஷ்ண ஸ்திதியைக் கொண்டுள்ளது. அந்த சீதோஷ்ணத்திற்கு ஏற்றவாறு உடை உடுத்தும் வகை இருந்தாலும் உடை உடுத்தும் முறையிலும், உடையை சுத்தமாக, புனிதமாக தூய்மையாக ஆக்கிக் கொண்டு அதன் மூலம் வாழ்க்கையைத் தூய்மைப்படுத்திக் கொள்வதென்பது இந்தியாவிற்கே உரித்தான ஒன்றாகும். மற்ற நாட்டினர் உடல் அழுக்குப் போவதற்காகக் குளிக்கிறார்கள். இந்தியர்கள் உடல் அழுக்குப் போவதற்காக மாத்திரம் அல்லாமல், உள்ளத்தில் உள்ள அழுக்கையும் போக்கிக் கொள்ளும் வகையில் குளிக்கிறார்கள்.

ஆணுக்கு ஒரு பெண்ணும், பெண்ணுக்கு ஓர் ஆணும் தேவைப்பட்டாலும் அவர்களது திருமணத்தைப் புனிதமான சடங்குகளுடன் நடத்தி, காகிதத்தில் எழுதியதை மாத்திரம் சாட்சியாக வைத்துக் கொள்ளாமல் (Registration) அக்கினியை சாட்சியாக வைத்துக் கொண்டு ஆண்-பெண் உறவு பிரிக்கப்பட முடியாமல் பிணைக்கப்பட்டு பரிசுத்தமான ஒரு வாழ்க்கையை அமைக்கும் முறை இந்தியாவிற்கே உரிய தனிப்பெரும் கலாசாரம் ஆகும். இந்திய மக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் வெளிப்புற அழகுடன் மாத்திரம் நில்லாமல், புனிதத் தன்மையை உடையவையாகவும் நல்ல சிந்தனையையும், நல்ல சம்ஸ்காரத்தையும் தருபவையாகவும் அமைகின்றன.

ஜெய ஜெய சங்கர... ஹர ஹர சங்கர...

(தொடரும்)


# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

### ஐப்பசி பூரம் குறித்து பெரியவா அருளிய அனுக்ரஹபாஷணம்

ஐப்பசி மாத பூர நக்ஷத்திர தினத்தன்று, காமாக்ஷி அம்பாள் இன்றைய கால கட்டத்திலே நாம் எந்த ரூபத்தோடு தரிசனம் செய்து வருகிறோமோ, மூலஸ்தான அம்பாளாக, நான்கு புஜங்களுடன், பத்மாசனத்திலே இருக்கக் கூடிய அந்த உருவத்துடன், பக்தர்களுக்கு தரிசனம் அளித்த தினமாக, ஆதி திராவிட தினமாக, பிரகடனமான தினமாக, இன்றைய தினம் கொண்டாடப்படுகிறது.

காமாக்ஷி அம்பாள் ஐந்து ரூபமாக தரிசனம் அளித்து, அனுக்ரகம் தருகிறாள். முதலிலே விலாகாச காமாக்ஷி, எந்த இடத்தில் ஓட்டை இருக்கின்றதோ, அந்த நிலத்தில் இருந்து வெளிப்பட்ட இடம். அந்த விலாகாசத்திலே, வருஷத்திற்கு ஒரு நாள் க்ஷீர அபிஷேகம் நடைபெறுகிறது. காஞ்சி காமாக்ஷி அம்மன் கோவிலிலே அது விசேஷமாக நடைபெறுகிறது. ஐப்பசி பூரம்.



இரண்டாவது தபஸ் காமாக்ஷி. ஒரு காலிலே நின்று கொண்டு, அந்த எகாக்ரத அம்பாள், எகாக்ரத நிலையோடு, ஸ்வாமியை தபஸ் பண்ணக்கூடிய நிலை. **சிதக்னிகுண்ட சம்பூதா** என்கிறோம். அந்த பஞ்சாக்னி தபஸ் பண்ணக்கூடிய அம்பாள். நான்கு பக்கமும் நான்கு அக்னிகள். மேலே சூரியன் பார்த்துக் கொண்டு அப்படி கடோரமான தபஸ். அதை கர்ப்ப காமாட்சியுடன் உள்ளேயே தரிசனம் செய்து கொள்ளலாம்.

வெளியிலே உற்சவதிற்க்காக பிரம்மோத்ஸவம், மாதப் பிறப்பு உற்சவம் இவைகளுக்காக வரக் கூடிய - **சசாமர ரமா வாணி சவ்ய தக்ஷிண சேவிதா** என்று சொல்லக் கூடிய அந்த அம்பாள், உற்சவ காமாக்ஷி அம்பாள்.

பிரம்ம தேவன் பூஜித்த அம்பாள் நாலாவது அம்பாள், பங்காரு அம்பாள். பங்காரு காமாக்ஷி. அந்த பங்காரு காமாக்ஷி ஸ்வர்ணமயமான காமாக்ஷி. அது தஞ்சாவூரிலே இருக்கிறது. காஞ்சிபுரத்திலே இருந்த அம்பாள், வேறு ஒரு சரித்திர பல்வேறு நிகழ்வு காரணமாக, இங்கிருந்து உடையார்பாளையம் சென்று, உடையார்பாளையத்திலிருந்து, காஞ்சிபுரத்தில் இருந்த காமாக்ஷி திருவாரூர், தஞ்சை மேல வீதியிலே இருக்கிறது. தற்போது பங்காரு காமாக்ஷி அம்மன் கோவில் மேலவீதியில் இருக்கிறது.

ஐந்தாவது கர்பக்ரகத்தில் இருக்கக் கூடிய மூலஸ்தான காமாக்ஷி. இப்படியாக ஐந்து காமாக்ஷி-விலாகாச காமாக்ஷி, தபஸ் காமாக்ஷி, உற்சவ காமாக்ஷி, பங்காரு காமாக்ஷி, மூலஸ்தான காமாக்ஷி. அந்த காமாக்ஷி அம்பாள் ஸ்தோத்திரத்தை ஐப்பசி பூரத்தன்று பக்தர்கள் பாராயணம் செய்ய ஆரம்பித்து, ஐந்து பூர நக்ஷத்திரத்திலே அதை பூர்த்தியாகப் பாராயணம் செய்து, அந்த அம்பாளின் அனுக்ரகத்தைப் பெற்று,

**समरविजयकोटी साधकानन्दधाटी**
**मृदुगुणपरिपेटी मुख्यकादम्बवाटी ।**
**मुनिनुतपरिपाटी मोहिताजाण्डकोटी**
**परमशिववधूटी पातु मां कामकोटी ।।**

**ஸமர விஜய கோடி ஸாதகானந்த தாடி**
**ம்ருது குணபரிபேடீ முக்ய காதம்பவாடீ**
**முனினுதபரிபாடி மோஹிதாஜாண்ட கோடீ**
**பரமஸிவவதூடீ பாது மாம் காமகோடீ**

என்பதாக அந்த பக்தி ரசனை பெருகி, அமுதத்தை பருகி, மென்மேலும் ஐஸ்வர்யம் போன்ற பல சௌக்கியங்களை அடைய காமாக்ஷி அம்மனை பிரார்த்தனை செய்ய வேண்டும்.

**அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்**
**அன்னை காமாட்சி உமையே.**

**ஹர ஹர சங்கர, ஜெய ஜெய சங்கர**

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ரரின் கீர்த்தனைகள்

# सदासिव ब्रह्मेन्द्र कीतर्नाः

**न हि रे न हि शन्का काचित् न हि रे न हि शन्का**

**अजमक्षरम्द्वैतमनन्तम् ह्द्यायन्ति ब्रह्म परम् शान्तिम् (नहि)**

**ये त्जन्ति बहुतरपरितापम् ये भजन्ति सच्चिदानन्दरूपम् (नहि)**

**फरमहम्सगुरु भणितम् गीतम् ये पटन्ति निगनार्थ्शसमेतम् (नहि)**

## ஸ்திரதா ந ஹி ந ஹி ரே !

ந ஹி ரே ந ஹி ஸங்கா காச்சின் ந ஹி ரே ந ஹி ஸங்கா

அஜமக்ஷரம் அத்வைதமனந்தம் த்யாயந்தி ப்ரம்ம பரம் சாந்திம் (நஹி)

யே த்யஜந்தி பஹுதர பரிதாபம் யே பஜந்தி ஸச்சித்சுக ரூபம் (நஹி)

பரமஹம்ஸகுரு பணிதம் கீதம் யே படந்தி நிகமார்த்தஸமேதம் (நஹி)

**பொருள் : அடே! அச்சமில்லையே யாதொரு அச்சமில்லையே**

பிறப்பில்லாததும், அழிவில்லாததும் தன்னிலும் வேறாக இல்லாததும், முடிவில்லாததும் சாந்தமானதும், சிறந்த ப்ரம்மத்தை எவர்கள் த்யானம் செய்கின்றார்களோ அவர்களுக்கு அச்சமில்லை. பல துன்பங்களையும் எவர் விடுகிறார்களோ எவர் சச்சிதானந்தத்தை பக்தியுடன் நாடுகிறார்களோ அவர்களுக்கு அச்சமில்லை.

வேதப் பொருளோடு கூடியதாயும், பரமஹம்ஸ குருவினால் சொல்லப்பட்டதாயுமுள்ள பாடலை எவர்கள் வாசிக்கிறார்களோ அவர்களுக்கு அச்சமில்லை.

# ஸ்ரீ பாதஸப்ததி-2

ஸ்ரீ மேல்பத்தூர் நாராயண பட்டத்ரி இயற்றியது

பி. ஆர். கண்ணன்

**த்வத்பாத3ம் நிஜமஸ்தகே க4டயிதும் லோகே ந கேகே ஜநா:**
**கிம் கிம் நாரசயந்தி து3ஶ்சரதபஶ்சர்யாஸபர்யாதி3கம் ।**
**மந்யே த4ந்யதமம் து தே3வி மஹிஷம் வைரஸ்த2யைவ த்வயா**
**யந்மூர்த்4நி ஸ்வயமேவ பாதகஹரம் பாதா3ம்பு3ஜம் பாதிதம் ॥**

2. ‘தேவி! உனது ஸ்ரீபாதத்தை தலையில் சுமப்பதற்காக, மூவுலகிலும் உள்ள எல்லா வகை மக்களும் (தேவர்கள், யக்ஷர்கள், கந்தர்வர்கள் முதலியவர்களும்) மிகவும் கடினமான தபஸ், பூஜைகள் போன்றவற்றை இயற்றுகிறார்கள். இருப்பினும், மகிஷாசுரன், மிகவும் அதிர்ஷ்டசாலி என்று நான் நினைக்கிறேன். அவன் உன் மீது பகை கொண்டிருந்தாலும், எல்லா பாவங்களையும் அழிக்கும் உனது தாமரை ஸ்ரீபாதத்தை நீயாகவே அவன் தலையில் வைத்தாயே.’

துர்கா ஸப்தசதி கூறுகிறது:

**‘‘சித்தே கிருபா ஸமர நிஷ்டுரதா ச த்ருஷ்டா**
**த்வய்யேவ தேவி வரதே புவன-த்ரயேபி’’ ॥ (4:22)**

‘ஓ! வரம் தருபவளே! மூவுலகிலும், உன்னிடத்தில் மட்டுமே நாங்கள் இரக்கத்தை மனதில் காண்கிறோம், (அதே நேரத்தில்) போரில் இரக்கமற்ற தன்மையைக் காட்டுகிறாய்.’

**த்வத்பாதா3ம்பு3ஜமர்பிதம் க்வ நு ஶிவே கிந்நு த்ரயீமஸ்தகே**
**நித்யம் தத்த்வவிசாரத3த்தமநஸாம் சித்தாம்பு3ஜாக்3ரேஷு வா ?**
**கிம் வா த்வத்ப்ரணயப்ரகோபவிநமந் மாராரிமௌலிஸ்த2லே**
**கிம் ப்ரோத்க2ண்டி3தகோ4ரஸைரிப4 மஹாதை3த்யேந்த்3ரமூர்த்3தா4ந்தரே ॥**

3. ‘‘மங்களாம்பிகே! உங்கள் தாமரை பாதங்கள் எங்கே? அவை (மூன்று) வேதங்களின் உச்சத்தில் உள்ளதா? அல்லது தங்கள் எண்ணங்கள் எப்போதும் பரமார்த்திக ஸத்தியத்தில் மூழ்கியுள்ள யோகிகளின் தாமரை இதயங்களில் இருக்கின்றனவா? அல்லது மன்மதனின்

பகைவனான சிவபெருமான், (அன்பின்) பிணக்கிற்குப் பிறகு உன்னைச் சமாதானப்படுத்துவதற்காக நமஸ்கரிக்கும் போது அவருடைய சிரஸ் மீது உள்ளனவா? அல்லது கொடூரமான மகிஷாசுரனின் துண்டிக்கப்பட்ட தலையின்மீதா? ''

வேதங்களின் உச்சம் உபநிஷதங்கள் அல்லது ஓங்காரமாக கருதப்படுகிறது.

ஸௌந்தர்யலஹரியில் ஆதிசங்கரர் கூறுகிறார்

**''ஸ்ருதீநாம் மூர்த்தாநோ ததாதி தவ யௌ சேகரதயா**
**மமாப்யேதௌ மத்த: சிரசி தயயா தேஹி சரணௌ'' । (84)**

'அம்மா! வேதங்களின் சிகரமாகிய உபநிஷதங்களின் சூடாமணியாக விளங்கும் தங்களின் எந்த பாதங்கள் உள்ளனவோ, அப்பாதங்களை கருணையுடன் என் சிரஸின்மீது வையுங்கள்.'

**த்வத்பாதா$^3$ஞ்சலரூப- கல்பலதிகா- பா$^3$லப்ரவாலத்$^3$வயம்**
**யே தாவத்கலயந்தி ஜாது ஶிரஸா நம்ரேண கம்ரோஜ்ஜ்வலம் ।**
**தேஷாமேவ ஹி தே$^3$வி நந்த$^3$நவந க்ரீடா$^3$ஸு லப்$^4$யம் புந:**
**ஸ்வர்வல்லீதருண ப்ரவால ப$^4$ரணம் ஸேவாநுரூபம் ப$^2$லம் ॥ 4**

4. ''தேவி! உனது ஸ்ரீபாதத்தின் முன்புறம் அழகாகவும் பளபளப்பாகவும், கல்பக மரத்தின் (சொர்க்கத்தின்) மென்மையான கொடியை ஒத்திருக்கிறது (வேண்டியவற்றைத் தரவல்லது). உங்கள் காலடியில் பணிந்து வணங்குபவர்கள் சொர்க்கத்தின் அழகிய தோட்டங்களில் விளையாடுவதும், அங்குள்ள கல்பக மரத்தின் இளமையான தளிர்களை சேகரிப்பதும் செய்வர். பலன் சேவைக்கு ஏற்ப உள்ளது. ''

சொர்க்க சுகத்தை விரும்புபவர்கள் சொர்க்கம் செல்கின்றனர். விமோசனம் வேண்டுபவர்களுக்கு மோக்ஷ பாக்கியம் கிடைக்கும். இதுவே ஸ்ரீபாதத்தின் கருணை.

ஸுரதன் என்ற மன்னன் தன் அடுத்த பிறவியில் இடையூறு இல்லாத அரசாட்சிக்காக தேவியிடம் வேண்டிக் கொண்டதையும், நான், என்னுடையது என்ற உணர்வில் இருந்து விடுபட்டு ஞானம் வேண்டி ஸமாதி என்கிற வைசியன் பிரார்த்தனை செய்ததையும் துர்கா ஸப்தசதி விவரிக்கிறது. தேவி மன்னரின் விருப்பத்தை மட்டும் நிறைவேற்றாமல், அவரை ஸாவர்ணி என்ற அடுத்த மனுவாக நியமித்தார். வைசியன் பரம ஞானம் என்கிற பெரும் பேற்றினால் அனுக்ரகிக்கப்பட்டார்.

**''ஸாவர்ணிகோ நாம மனுர்-பவான் புவி பவிஷ்யதி'' । (13:23)**

**''தம் ப்ரயச்சாமி ஸம்ஸித்யை தவ ஞானம் பவிஷ்யதி'' । (13:25)**

**தா4வல்யம் பரிலால்யதே புரரிபோரங்கே3ந துங்க3ஶ்ரியா**
**கிஞ்ச ஶ்யாமலிமாபி கோமலதரே பா 4த்யேவ கா3த்ரே ஹரே: ।**
**தத்தாத்3ரு'க்பதயூவீம் மமாபி ஜநயேதஸ்தோகஸேவாரஸா-**
**தா3ருண்யம் தவ லீயதே சரணயோ: காருண்யமூர்தே ஶிவே ॥ 5 ॥**

5. ''இரக்கத்தின் உருவகமே! மங்களகரமான தேவியே! வெண்மை நிறம் சிவபெருமானின் உடல் காந்தியினால் ஜொலிக்கிறது. கருப்பு நிறமும் இதேபோல் விஷ்ணுவின் உடலின் மென்மையான அழகோடு ஜொலிக்கிறது. உங்கள் காலடியில் உற்சாகத்துடன் அதீதமான சேவை செய்யும் சிவப்பு நிறம் அதே பதவிக்காக (சிவன், விஷ்ணு போன்ற) பிரார்த்தனை செய்து பின்னர் உங்கள் காலடியில் இணைகிறது. '

கருத்து என்னவென்றால், சிவப்பு நிறம் உங்கள் கால்களுக்கு அழகான பூச்சுகளின் வடிவத்தில் சேவை செய்து, இறுதியாக கால்களுடன் ஒன்றாக மாறுகிறது. தேவியின் உடலும் பாதங்களும் சிவப்பு நிறத்தில் உள்ளன. சிவப்பு நிறம், இவ்வாறு மற்ற இரண்டு வண்ணங்களை விட சிறந்து விளங்குகிறது - வெள்ளை மற்றும் கருப்பு.

மற்றொரு விளக்கம்: பக்தனான நான் உனது ஸ்ரீபாதத்தை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிருப்பதால், நீ எனக்கு சிவன் அல்லது விஷ்ணு என்ற அந்தஸ்தை வழங்கப் போகிறாய் என்பதை அறிந்து, உன் பாதங்களின் இயற்கையான சிவப்பு நிறம் மறைந்து ஒன்றிணைகிறது.

தேவி பாகவதம் ஒரு எழுத்தறிவு இல்லாத பிராமணன், ஸத்தியவ்ரதனின் கதையை விவரிக்கிறது, அவர் எப்போதும் உண்மையையே பேசுவார். ஒன்றும் அறியாமல், அவர் ஒரு சந்தர்ப்பத்தில் தேவியின் அதீத சக்தி வாய்ந்த 'ஐம்' என்ற பீஜாக்ஷரத்தினை தற்செயலாக உச்சரிக்க நேர்ந்தது. தேவி அவரை வால்மீகியைப் போல ஒப்பற்ற அறிஞராகவும் கவிஞராகவும் ஆக்கினார். அவளுடைய அருள் அப்படி.

**''பீஜோச்சரணதோ தேவ்யா வித்யா ப்ரஸ்புடித-அகிலா**
**வால்மீகஸ்ச யதா பூர்வம் ததா ச ஹ்யபவத்-கவி: ।'' (3:11:39)**

(தொடரும்)

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*।। ஓம் வினீதபுங்கவாய வேதாந்தபாஸ்கராய நம: ।।*

**ப்ரஹ்மநிஷ்டோ வினீதச்ச சமஸத்யாதிஸம்யுத : ।**

**சிஷ்யானுக்ரஹகர்தா ச குருர்வேதாந்தபாஸ்கர: ।।**

குருவாகியவர் பிரம்மநிஷ்டரும், வினயமுள்ளவரும், சமம் மற்றும் சத்தியம் உள்ளவரும், சிஷ்யருக்கு அனுக்கிரகம் செய்பவரும் ஆகியிருக்கிறார்.

## 36. ஸௌஜன்ய மூர்த்தியே சத்குரு !

**ஸ ஹோவாச ஏதத்வை ததக்ஷரம் கார்கி ப்ராஹ்மணா அபிவதந்தி!**

**ப்ரஹதாரண்யகோபநிஷத் 3-8-8**

*ஓ கார்கியே, பிராமணர் இதையே அக்ஷரம் என்று சொல்கிறார். என்று யாஜ்ஞவல்கிய மகரிஷி கூறுகிறார்.*

ஜனக மகாராஜா எற்படுத்திய வித்வத் சபையில் வாசக்னவி கார்கீ யாஜ்ஞவல்கியரிடம் இந்த அவ்யாக்ருத ஆகாசம் எதில் பின்னிப்பிணைந்திருக்கிறது ? என்று கேட்டார். யாஜ்ஞவல்கியர் ஒ கார்கீ, தத்துவத்தைக் கண்டு கொண்ட பிராம்மணர்கள் அதை அக்ஷரம் என்று சொல்கிறார்கள் என்றார்.

யாஜ்ஞவல்கியர், கர்ம காண்டம் மற்றும் ஞான காண்டங்களை நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தார். இவர் ஆத்மஜ்ஞானியும், ஆத்மநிஷ்டரும் ஆகிய மகாத்மா ஆவார்.

அக்ஷரத்தில் இந்த அவ்யாக்ருத ஆகாசம் பின்னிப் பிணைந்திருக்கிறது. **அக்ஷரம்** என்றால் நாசம் அற்ற தத்துவம். **ந க்ஷரதி இதி அக்ஷரம்.** பரப்பிரம்மத்தை உபநிஷத்களில் அக்ஷரம் என்று சொல்லப்படுகிறது. இதை பிராம்மணர்கள் கூறியதாக யாஜ்ஞவல்கியர் சொல்வதால் அவருக்கு ஆசார்யப் பரம்பரையில் மிகுந்த கௌரவமும் மதிப்பும் இருந்தது என்று தெரிகிறது.

।। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।

# வேத ஸூக்தங்கள்
# நாஸதீய ஸூக்தம்

பொதுவாக வேதங்கள் தேவதா ஆராதனைகளை ரிக்குகள், பாடல்கள் மூலமாக தெரிவிக்கும். பெரும்பாலானவை இப்படிப்பட்டவையே. இவைகளைத் தாண்டி பல ஸூக்தங்கள் மனிதனின் சிந்தனையை கொஞ்சம் உரசிப் பார்க்கும். மேலும் சிந்திக்க வைக்கும். நாஸதீய ஸூக்தம் என்னும் இந்த ஸூக்தம் அப்படிப்பட்ட ஸூக்தங்களுள் ஒன்று. இன்றைய விஞ்ஞானிகள் தமது ஆராய்ச்சி மூலம் என்னவெல்லாம் அனுமானிக்கிறார்களோ அவைகளை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நமது வேதம் கோஷித்துள்ளது.

இன்றைய விஞ்ஞானிகள் கூறும் big bang theory, black hole theory, universe expansion அனைத்திற்கும் இந்த ஸூக்தம் பதிலளிக்கிறது. மிகப் பெரிய ரஹஸ்ய வாதத்தை எடுத்து வைக்கிறது. ரிக், வேத ஸூக்தமான இதில் மொத்தம் 7 ரிக்குகள் உள்ளன. படைப்புக்கு முன் என்ன இருந்தது? படைப்பு எப்படி வந்தது? காரணம் என்ன?

இப்படி ஆராய்ச்சி நடக்கிறது. இறுதி ஸூக்தம் தான் முக்யமானது. சாயனரின் விளக்கம் விரிவானது. தேவையான அளவு பொருள் தரப்படுகிறது. இந்த ஸூக்தம் பற்றி பல ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. மேல் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் இதன் ஆழம், அகலம் பற்றி வியக்கிறார்கள் என்பதுதான் உண்மை. ஸூக்தத்தைப் பார்ப்போம்

1. அப்போது இருப்புமில்ல, இல்லாததுமில்லை. புவனமும் இல்லை, ககனமும் இல்லை. அதற்கு அப்பாலுமில்லை. எது எதை மூடியது? எங்கு? காத்தது யார்? ஆழம் காணா ஜலமிருந்ததா?

2. மரணமுமில்லை, அமரத்வமுமில்லை. இரவுமில்லை, பகலுமில்லை. தானே ஒன்று சுவாசித்தது. அதைத் தவிர வேறேதுமில்லை.

3. இருட்டை இருட்டு விழுங்கியது. அவ்யக்தமாக எதுவும் துச்சமாயிருந்த அதிலிருந்து தவம் வெளிப்பட்டது அதனால் ஏகம் பிறந்தது.

4. அப்போது மனதின் பீஜமாய் ‘காமம்’ வெளிப்பட்டது. ஸத்தில் இருந்த அஸத்தினை ஞான ஒளி தேடிய முனிவர்கள் கண்டனர்.

5. விபாக ரேகை குறுக்காக ஓடியது. மேலே என்ன? கீழே என்ன? பீஜத்தை வைத்திருந்தவன் இருந்தான். சக்திகள் இங்குமங்கும் எங்கும் எழும்பின.

6. எப்போது தொடக்கம், எப்போது ஜகத் ஸ்ருஷ்டி என்று யாரறிவார்? யார் கூறுவார்? இதன் பின் தானே தேவர்களின் ஜன்மம். எதிலிருந்து வந்தது என்று யார் அறிவார்?

7. ஸ்ருஷ்டி அதனுடன் இருந்ததா? இல்லையா? மேலிருந்து பார்ப்பவன் எவன்? அவன் இதை அறிவான். அவனுக்கே இது தெரியுமோ?

(தொடரும்)


**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

## VEDA RAKSHANA NIDHI TRUST

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/c. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/c No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank** West Mambalam A/c. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank** West Mambalam A/c No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram **A/c No. 411552514 IFSC IDIB b0005085**

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN No. ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> Phone : 044 - 24740549

ப்ரதீபப் பேழை

# தெய்வமும் பௌருஷமும்

கௌசிக நாராயணன்

**‘தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலிதரும்’.** என்று திருவள்ளுவ நாயனார் கூறியுள்ளார். அதாவது நாம் ஒரு காரியத்தைச் செய்கிறோம். அது கோரிய பயனைத் தரும் என்று நிச்சயம் சொல்ல முடியாது. சில வேளை பயனைத் தருகின்றது. அப்பொழுது அப்பயனை நாம் தெய்வானுகூலத்திலே பெற்றோம் என்று கொள்ள வேண்டும். சில வேளை தெய்வம் பிரதிகூலமாய் இருக்கிறது. காரிய சித்திக்கு வேண்டிய முயற்சியெல்லாம் செய்தும் பயன்படுவதில்லை. செய்வதெல்லாம் வீணாகி விட்டதே என்று நம் மனம் வருந்துகிறது. ஆனால் ஒன்றும் வீணாவதில்லை; செய்த காரியத்திற்குக் கூலி உண்டு; அக்கூலி மறுபிறப்பிலேனும் நமக்கு நிச்சயமாய்க் கிடைக்கும். அப்பிறப்பிலே அவ்வினைப் பயன் தெய்வமாக மாறி நம்மை வந்தடையும். இந்த ஜன்மத்திலேயும் நாம் செய்த காரியம் வீண்போவதில்லை. பயனை விரும்பாமல், **என் கடன் பணி செய்து கிடப்பதே** என்றிருந்தால் ஈசன் தன் கடமையைச் செய்கிறான். கடன் அடியானான என்னைத் தாங்குதல் என்ற மனவுறு வேண்டும். அவன் நமக்கு, யோகக்ஷேமங்களைத் தந்துதவுகின்ற பாரம் முழுவதையும் ஏற்றுக் கொள்கிறான்.

பயனை விரும்பாமல் காரியஞ் செய்தாலும் முயற்சிக்குரிய கூலியைத் தெய்வம் தந்தே தீரும். இதனாலேதான் தெய்வத்தை நம்பாதவர்களும் தங்கள் வேலைக்குத் தகுந்த பலனை அடைகிறார்கள். சிற்சில காரியங்கள் அவர்கள் விரும்பிய பயனைத் தரவில்லை என்றால், அது சின்னக் காரியத்தை அரைகுறையாகச் செய்துவிட்டுப் பெரிய பயனை அடைய விரும்புவதாலேதான் என்று அறிந்து கொள்ளவேண்டும்;

நம்முடைய வாழ்க்கையிலே தெய்வத்தாலே கிடைக்கும் பேறுகளும் உண்டு: நம்முடைய முயற்சிகளாலே பெறக்கூடிய பயன்களும் உண்டு. இதைத் தெய்வத்தாலேயே பெறக்கூடும் என்று சும்மா இருக்கக்கூடாது! இதற்குத் தெய்வம் பிரதிகூலமாக இருக்கும் என்று நினைத்துப் பிரயத்தனமே செய்யாமல் இருக்கக்கூடாது. தெய்வத்தின் மீது பாரத்தை போட்டுவிட்டு, நாம் நம்முடைய கடமைகளை மனச்சுத்தியோடும் சிரத்தையோடும் இடைவிடாது செய்து கொண்டேயிருக்க வேண்டும். நம்முடைய கடமைகளாக விதிக்கப்பட்டவையெல்லாம் சாஸ்திரங்களாலே நம்முடைய

நன்மைக்காகவே விதிக்கப்பட்டன என்ற திட நம்பிக்கை வேண்டும்; அதனாலே, சற்றும் தளராமல் வேலை செய்ய வேண்டும். இதுவே மேற் காட்டிய திருக்குறளின் உபதேசம்.

இந்த உபதேசத்திலேயே ஸ்ரீ பீஷ்மாசாரியர் தருமபுத்திரருக்கு ஒரு ஸம்பாஷனையைக் கொண்டு விளக்குகிறார்:-

பார்வதி பரமேசுவரரைக் கேட்கிறாள் : எல்லாம் தெய்வத்தாலே நிகழ்கின்றது என்று சிலர் கூறுகிறார்கள்; வேறு சிலர், தாம் கண்ணாலே காண்கின்றதைக் கொண்டே, முயற்சியாலே எல்லாம் நடைபெறுகின்றது என்கிறார்கள். இதனால் எனக்குச் சந்தேகம் தெளியவில்லை உண்மையைத் தாங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று பிரார்த்திக்கிறாள்.

'தேவி! உண்மையை விளக்கிக் காட்டுகிறேன், கவனமாகக் கேள், மானிடர் செய்யும் கருமம் 'முன்செய்தது' 'இப்பொழுது செய்தது' என இருவகைப்படும். 'முன்செய்த வினை' இப்பொழுது கண்களுக்கு புலப்படாதிருப்பதால் அது 'தைவம்' எனப்படும்; கண்ணாற் காணப்படுகின்ற செயல் மானுஷம் எனப்படும். மானுஷம் செயல் மட்டுமேயாகும். தெய்வமே பயனைத் தருவது. 'லௌகிகம்' என்று சொல்லப்படுவது. 'தைவம்' 'மானுஷம்' இரண்டும் கலந்தது. உலகத்தோர் செயல்கள் சிற்சில வேளைகளிலே பயன்பெறுவதில்லை; அவை கெட்ட செய்கையாகவும் இருக்கக்கூடும். பயன் எப்படியானாலும், நன் முயற்சியாலே புகழைப் பெறுவது நிச்சயம்; கெட்ட முயற்சியோ உலகோர் பழிப்பதற்கு ஏதுவாகும்

இவ்வாறு சொல்லிவிட்டுப் பரமேசுவரர் மீண்டும் சொல்கிறார்.

தைவம் என்பது சுபமாகவும் இருக்கலாம்; அசுபமாகவும் இருக்கலாம். ஆனால் அது ஏன் அவ்வாறு இருக்கிறது என்று புத்தியைக் கொண்டு அறிய முடியாது; காரணங்களையும் நாம் கண்டறிய முடியாது. புத்தியைக் கொண்டு காரணங் காட்டக் கூடிய 'பௌருஷம்' என்றே சொல்லப்படுகின்றன. அதாவது அந்தச் செய்திகள் எல்லாம் நம்முடைய புத்திக்கெட்டிய காரிய காரண ' முறையின்படி நிகழ்கின்றன.

தைவம் பௌருஷம் இரண்டும் சேர்ந்துதான் நமக்கு ஒவ்வொரு காரியத்திற்கும் பயனையளிக்கின்றன. 'பௌருஷ''த்தை கொண்டு காரியத்தைத் தொடங்குவோனே அறிவாளி. ஆத்ம சக்தியாலே ஆகாதது ஒன்றும் இல்லை. அவ்வாறு முழு பலத்தோடும் முயல்வோன் நிச்சயம் புகழ்பெறுவான்.

பூமியைத் தோண்டினாலன்றோ ஜலம் கிடைக்கும் அரணிக் கட்டையைக் கடைந்தாலன்றோ அக்கினி உண்டாகும்; இவை போலவே மானிட முயற்சி இருந்தால் மட்டுமே தைவானுகூலமும் உண்டு. காரியம் ஒன்றும் செய்யாது, சோம்பியிருந்தால், தைவம் தானே அவனிடம் நற் பயனைக் கொண்டுவந்து தரமாட்டாது. ஆகையால், எல்லா காரியங்களுக்கும் பயனை மானுட முயற்சியோடு தைவானுகூலமும் சேர்ந்தே தருகின்றது.

இவ்வாறு பரமேசுவரர் விளக்கிய உண்மையைத் தான் திருவள்ளுவர் **குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம் மடித்தற்றுத்தான் முந்துறும்** என்று சூத்திரமாகச் செய்திருக்கிறார். விடாமுயற்சியோடு எடுத்த காரியத்திலே முனைந்து வேலை செய்வேன் என்று ஒருவன் நிச்சயித்துப் பாடுபட்டால் அவனுக்குத் துணையாகத் தெய்வம் மடி தட்டிக் கொண்டு முன்வந்து நின்று உதவிபுரிந்து விரும்பிய பயனை அளிக்கும் என்பது இக்குறளின் பொருள்.

**இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி**
**வேளாண்மை செய்தல் பொருட்டு**

வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவது எல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும்.

(குறள்:81)

இல்வாழ்வோன் தன்னிடம் வந்து சேர்ந்த விருந்தினரைத் தக்க ஆசனம், உணவு, படுக்கை, தண்ணீர், கிழங்கு, பழம் இவை கிடைக்கப் பெறாமல் வருத்தி விடக் கூடாது.

(மநுநீதி : 4-29)

தான் இல்லாமல் ராமன் எப்படி விருந்தினரை உபசரிப்பான் என்று அசோகவனச் சிறையில் இருந்த போது சீதை வாடினாள்.

(இராமாயணம் : சுந்தரகாண்டம் : காட்சிப் படலம் : 15)

# மாசி மாத ஸ்ரீ மடத்தின் விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| *18-02-2025* | செவ்வாய் | ஸ்வாதி வேத பாராயணம் |
| *19-02-2025* | புதன் | அனுஷம் தேர் |
| *20-02-2025* | வியாழன் | அனுஷம் வேத பாராயணம் |
| *23-02-2025* | ஞாயிறு | மூலம் தேர் ; மூலம் வேத பாராயணம் |
| *24-02-2025* | திங்கள் | ஏகாதசி |
| *25-02-2025* | செவ்வாய் | ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஜயந்தி த்வாதசி ; ப்ரதோஷ பூஜை உத்ராடம் தேர் ; உத்ராடம் வேத பாராயணம் |
| *26-02-2025* | புதன் | மஹா சிவராத்ரி ; அவிட்டம் தேர் |
| *27-02-2025* | வியாழன் | அவிட்டம் வேத பாராயணம் |
| *02-03-2025* | ஞாயிறு | ஜகத்குரு ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஆஸ்ரம ஸ்வீகார தினம் |
| *10-03-2025* | திங்கள் | ஏகாதசி |
| *11-03-2025* | செவ்வாய் | ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை த்வாதசி ; ப்ரதோஷ பூஜை |

# அநுகீதாபர்வம்

## (பதினெட்டாவது பர்வம்)

(ஸித்தர் பிராணிகளின் ஜனன மரண முதலியவற்றைக் காஸ்யபருக்குக் கூறியது)

பிறகு, காஸ்யபர் அந்த ஸித்தருடைய பாதங்களில் நமஸ்கரித்துச் சொல்வதற்கு மிகக் கடினமான கேள்விகளைக் கேட்டார். தர்மத்தைச் செய்பவருள் சிறந்தவரான அந்த ஸித்தரும் அந்தத் தர்மங்களைச் சொன்னார். காஸ்யபர், ஜீவன் சரீரத்திலிருந்து எவ்விதம் விலகுகிறது? எவ்விதம் (சரீரத்தை) அடைகிறது? ஜனன மரணமாகிய ஸம்ஸாரத்தையடைந்த ஜீவன் கஷ்டமான அதிலிருந்து எவ்விதம் விடுதலையடைகிறது. ஆத்மாவானது பிரகிருதியையும் அதனாலுண்டான சரீரத்தையும் எவ்விதம் விடுகிறது? சரீரத்திலிருந்து விடுபட்டு எவ்விதம் வேறொன்றை அடைகிறது? இந்தப் புருஷன் சுபாசுபகர்மங்களை எவ்வாறு அனுபவிக்கிறான்? சரீரமற்ற ஆத்மாவுக்கு (சரீரத்திற்குக் காரணமான) கர்மம் எங்கிருந்து வருகிறது? என்று வினவினார். வ்ருஷ்ணிகுலத்திலுதித்தவரே ! இவ்விதம் வினவப்பட்ட ஸித்தர் அந்தக் கேள்விகளுக்கு வரிசையாக மறுமொழி கூறினார். அதனை நான் சொல்லுகிறேன்; கேளும்.

ஸித்தர், கர்மங்கள் இந்த ஜன்மத்திலேயே சீக்கிரத்தில் பயனைத் தருபவைகளும் ஆயுளை வ்ருத்தி செய்கின்றவைகளுமாகக் கருதப்படுகின்றன. மனிதன் இந்த ஜன்மத்தில் ஆயுளையும், கீர்த்தியையும் உண்டுபண்ணுகிற எந்தக் கர்மங்களைச் செய்கிறானோ அவைகள் வேறு சரீரமெடுத்து முழுதும் நசித்தபின், ஆயுளின் குறைவை அடைந்த அம்மனிதன் விபரீதமான கர்மங்களைச் செய்கிறான். விநாசம் நெருங்கின பொழுது அவனுடைய புத்தியும் மாறுகிறது. அறிவில்லாதவன் தன்னுடைய ஸ்வபாவத்தையும், பலத்தையும், காலத்தையும் அறிந்து கொள்ளாமல் தனக்கு விரோதமானவைகளை மிதமின்றிப் புஜிக்கிறான். அப்பொழுது அவன் மிகவும் கஷ்டமான எல்லாவற்றையும் செய்கிறான். ஒரு ஸமயம் அதிகமாகப் புஜிக்கிறான். (ஒரு ஸமயம்) புஜிக்காமலுமிருக்கிறான். தோஷமுள்ள அன்னத்தையும், மாம்ஸத்தையும், மத்யத்தையும் ஒன்றுக்கொன்று விரோதமான ஆகாரத்தையும், கடினமான ஆகாரத்தையும் பகலில் (முன் புஜித்தது) நன்கு ஜீர்ணமாகாமலிருக்கும் பொழுது மறுபடியும் மிதமின்றிப் புஜிக்கிறான்; அதிகமான வேலையையும் ஸம்போகத்தையும் செய்கிறான். எப்பொழுதும் வேலையில் ஆசையினால், நேர்ந்த (மல மூத்திரங்களின்) வேகத்தை அடக்கிக் கொள்ளுகிறான். ருசியுள்ள அன்னத்தைப் புஜிக்கிறான். பகலில் நித்திரை செய்கிறான்.

அகாலத்தில் அபக்வமான அன்னத்தைப் புஜித்துத் தானாக (வாத முதலான) தோஷங்களை விருத்தி செய்து கொள்ளுகிறான். தன் தோஷங்களை விருத்தி செய்து மரணத்தை முடிவாகக் கொண்ட ரோகத்தை அடைகிறான். அல்லது உத்பந்தனம் முதலான யாகங்களைச் செய்கிறான். அப்பொழுது அந்த ஜந்துவுக்கு அந்தக் காரணங்களால் சரீரம் நசிக்கிறது. உயிர்வாழ்வதைப் பற்றிச் சொல்லப்படுவதை உள்ளபடி தெரிந்து கொள். சரீரத்திலுள்ள உஷ்ணமானது கடுமையான வாயுவினால் தூண்டப்பட்டு விருத்தியடைந்து சரீரத்தில் பரவி எல்லாப் பிராணன்களையும் தகைக்கிறது. சரீரத்தில் அதிக பலமுள்ள உஷ்ணமானது விருத்தியடைந்து ஜீவஸ்தானங்களான மர்மங்களைப் பிளக்கிறது. உண்மையாகத் தெரிந்துகொள். பிறகு, வேதனையுள்ள ஜீவன் உடனே சரீரத்திலிருந்து விலகுகிறான். பிராம்மண ஸ்ரேஷ்ட ! ஜீவனானவன் மர்மங்கள் பிளக்கப்படும் போது வேதனைகள் சூழ்ந்த ஸ்வரூபமுள்ளவனாகிச் சரீரத்தை விடுகிறான். அதைத் தெரிந்துகொள். பிராம்மண ஸ்ரேஷ்ட! எப்பொழுதும் எல்லாப் பிராணிகளும் ஜனன மரணங்களில் பயமுள்ளனவாகவும் சரீரங்களை விடுகின்றனவாகவும் காணப்படுகின்றன. மனிதன் கர்ப்பத்திலுள்ள சரீரத்தையடையும் பொழுதும் கர்ப்பத்திலிருந்து வெளிப்படும் பொழுதும் அப்படிப்பட்ட வேதனையையே அடைகிறான். மனிதன் மூட்டுக்கள் விட்டு ஜலத்தால் அழுகிப் போதலை அடைகிறான்.

ஐந்து பூதங்களிலும் பிராணாபான ஸ்தானங்களிலும் நிலைத்திருக்கும் வாயுவானது, சரீரத்தில் கடுமையான வேறு வாயுவினால் தூண்டப்பட்டுச் சைத்யத்தால் விருத்திடைந்து ஐந்து பூதங்களையும் பிரியும்படி செய்து கொண்டு ஸ்ரமத்துடன் ஜீவர்களை விட்டு மேற் செல்லுகிறது. இவ்விதம் சரீரத்தையும் விடுகிறது. மனிதன் ஸ்வாஸமற்றவனாகக் காணப்படுகிறான். சூடும் மூச்சும், ஒளியும், உணர்ச்சியும் செய்கையுமற்ற மனிதன் மரித்தவன் என்று சொல்லப்படுகிறான். சரீரத்தையடைந்த ஜீவன் எந்த இந்திரியங்களால் இந்திரிய விஷயங்களை அறிகிறானோ அந்த இந்திரியங்களாலேயே (பிராணன் போனபின்) அறிகிறதில்லை. எந்த ஜீவன் அந்தச் சரீரத்திலேயே ஆகாரத்தாலுண்டான பிராணன்களை ஏற்படுத்திக் கொள்ளுகிறானோ அந்த ஜீவன் அழிவற்றவன். மரணகாலத்தில் எது எது விடப்பட்டதாகிறதோ அது மர்மஸ்தானமென்று தெரிந்து கொள். அது அவ்விதம் சாஸ்திரத்தில் காணப்பட்டிருக்கிறது. அந்த மர்மங்கள் பிளக்கப்படும் போது அந்தப் பிராணன் அந்த மர்மங்களினின்று கிளம்பியதாகிப் பிராணியினுடைய ஹ்ருதயத்தில் பிரவேசித்துச் சீக்கிரத்தில் அறிவையும் மறைக்கிறது. பிறகு, சைதன்யமுள்ள அந்தப் பிராணியானது தமஸினால் அறிவும், மர்மங்களும் மூடப்பட்டு ஒன்றையும் அறிகிறதில்லை. அந்த

ஜீவன் இருப்பிடமற்று வாயுவினால் நிலை குலையச் செய்யப்படுகிறான். பிறகு, அந்த ஜீவன் பயங்கரமாகவும், அதிகமாகவும் பெருமூச்சு விட்டு வெளிக் கிளம்பும் போது சைதன்யமற்ற அந்தச் சரீரத்தைச் சீக்கிரமாக அசையும்படி செய்கிறான். அந்த ஜீவன் சரீரத்திலிருந்து வெளிப்பட்டுத் தன்னுடையவைகளான நன்மையைச் செய்யும் புண்ய கர்மங்களாலும், பாவ கர்மங்களாலும், சூழப்பட்டவனும் அடையாளம் செய்யபட்டவனுமாகிறான். இருளில் ஆங்காங்கு பிரகாசிக்கின்ற மின்மினிப் பூச்சியைக் கண்ணுள்ளவர்கள் பார்ப்பது போல ஞானம் நிறைந்தவர்களும் உள்ளபடி சாஸ்திர நிச்சயமுள்ளவர்களும் ஞானக் கண்ணுள்ளவர்களுமான பிராம்மணர்கள் புண்ணியம் செய்தவனையும் பாவம் செய்தவனையும் அடையாளங்களால் பார்த்துத் தெரிந்து கொள்ளுகிறார்கள், ஸித்தர்கள் இவ்விதமான ஜீவன் கர்ப்பத்தில் பிரவேசிப்பதையும் சரீரத்தினின்று வெளிப்படுவதையும் பிறப்பதையும், திவ்யமான கண்ணால் பார்க்கிறார்கள். அந்த ஜீவனுக்கு இவ்வுலகில் பலவித ஸ்தானங்கள் சாஸ்திரத்தால் காணப்பட்டிருக்கின்றன. பிராணிகள் வஸிக்கும் இந்தப் பூமியானது கர்ம பூமி. ஆகையால், எல்லாப் பிராணிகளும் புண்ணிய பாபகர்மங்களைச் செய்து இவ்வுலகத்திலேயே தம் கர்மங்களால் பலவிதமான போகங்களை அடைகின்றன. இவ்வுலகத்திலேயே பாப கர்மங்களைச் செய்தவர்கள் நரகத்தை அடைகிறார்கள். இந்தக் கதியானது இழிந்ததும் கஷ்டமுமானது. இதில் மனிதர்கள் வேவிக்கப்படுகிறார்கள். இதிலிருந்து மோக்ஷம் கிடைப்பது மிக அரிது. ஆகையால், ஆத்மாவை நன்கு ரக்ஷித்துக் கொள்ள வேண்டும். பிராணிகள் மேலுலகம் சென்று எந்த ஸ்தானங்களில் வசிக்கிறார்களோ அவைகளை நான் இப்பொழுது சொல்லுகிறேன்; உள்ளபடி தெரிந்து கொள். அதைக் கேட்டு மனவுறுதியையும் கர்மங்களின் நிச்சயத்தையும் தெரிந்து கொள். எந்த இடத்தில் எல்லா நக்ஷத்திரங்களும் சந்திர மண்டலமும் இருக்கின்றனவோ, எந்த லோகத்தில் ஸூர்யமண்டலமானது தன் காந்தியால் பிரகாசிக்கிறதோ அவைகளைப் புண்ணியஞ் செய்தவர்கள் வஸிக்கும் ஸ்தானங்களாகத் தெரிந்துகொள். அவர்களெல்லாரும் கர்மங்கள் (அனுபவித்து) நசித்தவுடன், அடிக்கடி (அவ்விடங்களிலிருந்து) கீழுலகத்திற்கு வருகின்றனர். அந்தத் தேவலோகத்திலும் உயர்வு, தாழ்வு, நடு என்னும் விசேஷம் இருக்கிறது. அவ்விடத்திலும் மிகவும் பிராகாசிக்கும் (மற்றவனுடைய) ஸம்பத்தைப் பார்த்து ஸந்தோஷம் உண்டாகிறதில்லை. இவ்விதம் இந்த எல்லாக் கதிகளையும் உனக்குத் தனித்தனியாகச் சொன்னேன். இனிமேல் அது மர்மஸ்தான கர்ப்பம் உண்டாகும் விதத்தைச் சொல்லுகிறேன். பிராம்மண! அவ்விதத்தைச் சொல்லும் போது ஸாதவானமாகக் கேள்.

★★★★

# முகாம் நிகழ்ச்சிகள்

முகாம் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி



**டிச 29** – மூன்றாவது விஷ்வ ஹவ்யக சம்மேளனத்தல் ஜகத்குரு சங்கராசார்ய மூலாம்ஞாய சர்வக்ஞ ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் அனுக்ரஹ பாஷணம் வழங்கி அருளினார்கள்.

**ஜன 1** – பூஜ்ய ஸ்ரீ சங்கராசர்ய சுவாமிகள் இன்று ஸ்ரீ சுரேஸ்வராசாரியார் சந்நிதி மற்றும் பிருந்தாவனங்களில் விசேஷ பூஜைகளும், ஹாரத்தியும் செய்து அருளினார்கள்.

**ஜன 3** – ஜி.ஜி டிரஸ்ட் வெள்ளி விழா நிகழ்ச்சிகளில் ஸ்ரீ சத்குருநாதர் பாதுகா ஆராதனையில் ஜகத்குரு சங்கராசார்ய மூலாம்ஞாய சர்வக்ஞ ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அனுக்ரஹபாஷணம் வழங்கி அருளினார்கள்.

**ஜன 4** – பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் ஆக்ஞைபடி திரிவேணி சங்கமம் பிரயாக்ராஜ் கும்பமேளா 2025ல் 12-1-2025 முதல் 26-02-2025 வரை நடைபெறவுள்ளதை முன்னிட்டு அவ்விடத்தில் ஸ்ரீ மடத்தின் சார்பாக பந்தல் அமைத்து வேதபாராயணம், ஹோமங்கள், சங்கல்ப ஸ்நானம், தானம், தங்க வசதி, கலை நிகழ்ச்சிகள் மற்றும் அன்னதானம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**ஜன 5** – ஸ்ரீ காமாக்ஷி சமிதி சார்பாக சென்னை கிழக்கு தாம்பரம் ராஜகீழ்பாக்கம் ஸ்ரீ காஞ்சி மஹா சுவாமி வித்யா மந்திர் வளாகத்தில் அத்யாபக, அத்யாபிக சம்மேளனம் பிற்பகல் 2.00 மணி முதல் 6.00 மணி வரை நடைபெற்றது.

**ஜன 6 -** ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம அனுக்ரஹ டிரஸ்ட் மூலம் 9வது விருது வழங்கும் விழா பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் ஆசியுடன் பல்வேறு வேத விற்பன்னர்களுக்கு மஹா மஹோபாத்யாய முல்லைவாசல் டாக்டர் ஆர். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளால் வழங்கப்பட்டன.

## விருது பெற்றவர்களின் விபரம் :

| விருது பெறுபவர் பெயர் | விருது விவரம் | பயன் |
|---|---|---|
| ப்ரம்மஸ்ரீ B. மஹாலிங்க கணபாடிகள் (பெங்களூர்) | வேத பிரசார ரத்னம் | வேத பிரசாரம் |
| ப்ரம்மஸ்ரீ R. விஸ்வேஸ்வர சாஸ்திரி டிராவிட் (காசி) | சாஸ்த்ர பிரசார ரத்னம் | சாஸ்த்ர பிரசாரம் |
| ப்ரம்மஸ்ரீ ஸ்ரீஹரிராம் தைகூட் (திருப்பதி) | சாஸ்த்ர பிரசார ரத்னம் | சாஸ்த்ர பிரசாரம் |
| ப்ரம்மஸ்ரீ பேராசிரியர் K. கணபதி பட் (திருப்பதி) | ஜோதிஷ வித்யா ரத்னம் | ஜோதிஷ பிரசாரம் |
| ப்ரம்மஸ்ரீ M. சேனாபதி சாஸ்திரிகள் (பெங்களூர்) | ஸ்ரீ வித்யா உபாஸனா ரத்னம் | ஸ்ரீ வித்யா பிரசாரம் |
| ப்ரம்மஸ்ரீ K. ஜெயராம கனபாடிகள் (பெங்களூர்) | வைதீக சமூக சேவாரத்னம் | வைதீக சமூகம் |
| ப்ரம்மஸ்ரீ பிரபாகர் தீனகர் ஜோகலேகர் (மஹாராஷ்ட்ரா) | ஸ்ரௌத பிரயோக ரத்னம் | ஸ்ரௌத பிரசாரம் |
| ப்ரம்மஸ்ரீ R. ஆத்ரேய கனபாடிகள் (களம்பூர்) | ஷடங்க ரத்னம் | ஷடங்க பிரசாரம் |
| ப்ரம்மஸ்ரீ N. வைத்யநாத சர்மா சம்பத் வாத்யார் (காஞ்சிபுரம்) | ஸ்மார்த்த பிரயோக ரத்னம் | க்ருஹ்ய சூத்ர பிரயோக பிரசாரம் |
| ப்ரம்மஸ்ரீ R. நீலகண்ட சாஸ்திரிகள் (திருவானைக்காவல்) | தர்ம பிரசார ரத்னம் | தர்ம பிரசாரம் |
| ப்ரம்மஸ்ரீ R. சந்திரசேகர சர்மா (கும்பகோணம்) | ஸ்ரீமட சேவா கைங்கர்ய ரத்னம் | ஸ்ரீமட சேவா கைங்கர்யம் |

**ஜன 7 –** தேர்வு எழுதச் செல்லும் சங்கரா பள்ளி மாணவர்களுக்கு காணொலி வாயிலாக ஜகத்குரு அனுக்ரஹம் செய்து அருளினார்கள்.

மும்பை செம்பூர் ஸ்ரீ சுப்ரமண்ய சமாஜ் கோவில் வளாகத்தில் 80 ஆண்டுகளாக நடந்து வரும் அதிருத்ரம் மற்றும் சஹஸ்ர சண்டி ஹோம மகா யக்ஞங்களுக்கு ஜகத்குரு சங்கராசார்ய மூலாம்ஞாய சர்வக்ஞ ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அனுக்ரஹபாஷணம் செய்தருளினார்கள்.

**ஜன 8 –** ஸ்கந்த புராண பிரவசன பூர்த்தி நடைபெற்றது. ஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா 31வது வருட ஆராதனை மஹோத்ஸவத்தில் **ஸ்ரீ மதாந்த்ர மஹாபாரத பாத்ய சுமர்சனா** நடைபெற்றது.

தேர்வு எழுதச் செல்லும் சங்கரா பள்ளி மாணவர்களுக்கு (இண்டாம் பிரிவு) ஜகத்குரு அனுக்ரஹம் அளித்து அருளினார்கள்.

**ஜன 9 –** இன்று **தசமஹா வித்யா மந்த்ர சாஹித ஸ்ரீ மங்கள** சண்டி மஹா யாக நிகழ்விற்கு அனுக்ரஹபாஷணம் செய்தருளினார்கள்.

**ஜன 10 –** வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு திருப்பதி சம்பிரதாய பாடசாலை வித்யார்த்திகள் விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம் திருமலையில் நடைபெற்றது.

**ஜன 13 –** ஆருத்ரா தரிசன திருநாளை ஒட்டி ஸ்ரீமடம் அருகில் உள்ள ஸ்ரீ ராமனாத சுவாமி திருக்கோவில் உற்சவமூர்த்தி ஸ்ரீ மடத்திற்கு எழுந்தருளிச் செய்தார்கள். அதுசமயம் பூஜ்ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் உற்சவ மூர்த்திக்கு பூஜைகள் செய்தருளினார்கள்.

ஆருத்ரா தரிசனம் மார்கழி மாத பௌர்ணமி தினத்தன்று அனுசரிக்கப்படுகிறது.

**ஜன 14 –** பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்தி சங்கராசார்ய சுவாமிகளின் 32வது ஜெயந்தி நாளில் 2001ல் ப்ரயாக்ராஜ் கும்பமேளா சமயத்தில் விஜயம் செய்த நிகழ்வுகள் நினைவு கூறப்பட்டன.

பொங்கல் பண்டிகை நன்னாளில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் பக்தர்களுக்கு விஸ்வரூப தரிசனம் அளித்தருளினார்கள். தொலைக்காட்சிக்கும் பொங்கல் அருளுரை வழங்கி அருளினார்கள்.

**ஜன 15 -** பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் கனு உத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாளுக்கு விசேஷ அபிஷேகங்கள் செய்தருளினார்கள்.

மாலை ஸ்ரீ மடத்தில் மாட்டு பொங்கல் கொண்டாடப்பட்டு பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் கோ பூஜை தீபாராதனை செய்தருளினார்கள். ஸ்ரீ மடத்தின் ஏனைய கோசாலைகளிலும் மாட்டு பொங்கல் கொண்டாடப்பட்டது.

சுவாமிமலை தமிழ்நாட்டில் உள்ள ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி ஆறுபடை வீடுகளில் ஒன்றாகும். இங்குதான் சிவபெருமான் தனது தெய்வக் குழந்தை ஸ்ரீ சுப்ரமணியர் இடமிருந்து பிரணவத்தின் பொருள் உபதேசம் பெற்ற இடமாகும்.

சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாத சுவாமி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது பீடாதிபதி ஸ்ரீ சந்திசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் மற்றும் 65வது பீடாதிபதி சுதர்சன மஹாதேவேந்திர சரஸ்வதி சுவாமிகளின் குல தெய்வமாகும்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி சுவாமிமலை வேத பாராயண டிரஸ்ட் மூலம் ஜனவரி 8 முதல் 10 வரை வேத பாராயணம் கர்நாடகாவை சேர்ந்த 11 வேத பண்டிதர்களால் (ரிக் வேதம் 6, கிருஷ்ண யஜுர் வேதம் 2, மற்றும் சாமவேத கௌதம சாஹா 3) காஞ்சி காமகோடி ஸ்ரீ மடத்தில் நடைபெற்றது.

வேத பண்டிதர்களுக்கு சன்மானத்துடன் ''தெய்வ வாணி'' கன்னட தெய்வத்தின் குரல் புத்தகம் வழங்கப்பட்டது. ஏப்ரல் 2024 முதல் இதுவரை 678 வேத பண்டிதர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

## கும்பமேளா 2025:

பூஜ்ய ஸ்ரீ மஹா சுவாமிகள் அலகாபாத் சங்கமத்தில் பக்தர்கள பிரார்த்தனை செய்யும் வகையில் தெய்வ சந்நிதி ஒன்று நிறுவ எண்ணியதையடுத்து 1986ம் ஆண்டில் பிராயக்ராஜ் சங்கமத்தில் ஆதி சங்கர விமான மண்டபம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இது உத்திரபிரதேச அரசு, திருமலை திருப்பதி தேவஸ்தானம், இந்தியாவில் உள்ள அனைத்து திருக்கோவில்கள் நிர்வாகம், அனைத்து சமய, கலாசார குழுக்கள் மற்றும் நன்கொடையார்களைக் கொண்டு அமையப் பெற்றதாகும். இது 17 தூண்களுடன் மூன்று அடுக்குகளாக முதல் நிலையில் அன்னை காமாக்ஷியும், இரண்டாம் நிலையில் ஸ்ரீ வெங்கடேச பெருமாளும், மேல் நிலையில் சகஸ்ரலிங்கமும் அமையப் பெற்றுள்ளது.

பக்தர்கள் பிரத்யேகமாக பிரார்த்தனை செய்யும் வகையில் வசதிகள் செய்யப்பட்டு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

நடப்பு கும்பமேளாவிற்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் மூலம் விசேஷ பந்தல் அமைக்கப்பட்டு பல்வேறு சமய, கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கும்பமேளாவை முன்னிட்டு பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் ஆக்ஞைபடி ஜனவரி 25 முதல் 29 வரை விசேஷ ஹோமங்கள் மற்றும் பூஜைகள் நடைபெற்றன.

மகர சங்கராந்தி உத்தராயண புண்ய காலத்தை ஒட்டி ஜனவரி 11 முதல் 17 வரை 8வது பரசுராம் குன்று யாத்திரை நடைபெற்றது. வேத பாராயணம், ஹோமங்கள், கோ பூஜை, சங்கல்ப ஸ்நானம், ஸ்லோக பாராயணம், பூர்ணாஹுதி, தீபாராதனை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. 1000 யாத்ரீகர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டன. இதில் உள்ளூர் மக்களும் திரளாக பங்கு பெற்றனர்.

ஸ்ரீ ஹனுமான் திருக்கோவிலை சுற்றி ஸ்ரீ ஆதிசங்கரர் விக்ரஹம் புறப்பாடு செய்யப்பட்டது.

**ஜன** 20 - பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் திருவண்ணாமலைக்கு விஜய யாத்திரை புறப்பட்டார்கள்.

**ஜன** 21 - பிரயாக்ராஜில் கும்பமேளாவில் அகண்ட ராமாயண படனம் நடைபெற்றது.

**ஜன** 22 - குவாலியரில் நடைபெற்ற ரிக்வேத சம்ஹிதா பாராயணத்திற்கு பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அனுக்ரஹபாஷணம் வழங்கி அருளினார்கள்.

சென்னை திருவல்லிக்கேணியில் வேத தர்ம சாஸ்த்ர பரிபாலன சபை மூலம் வேத சம்மேளனம் பூர்த்தியும் ஆவஹந்தி ஹோமமும் நடைபெற்றன.

**ஜன** 25 - சிதம்பரம் கோவில் பிரசாதம் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின ஆக்ஞைபடி ஸ்ரீமத் பகவத்கீதை விரிவுரை தொடர் நிகழ்ச்சி ஜனவரி 25ம் தேதி முதல் ஸ்ரீ P.R. கண்ணன் என்பவரால் வாரம் விட்டு வாரம் நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர**

# சுக நாஸ உபதேசம்

**ஸ்ரீமதி விசாலாக்ஷி சங்கரன்**

சுமார் 7 ஆவது நூற்றாண்டில் பிறந்தவர் பாணபட்டர். மிகச்சிறந்த கவி **'பாணோச்சிஷ்டம் ஸர்வம்'** என்று கவிகளாலும் பண்டிதர்களாலும் கொண்டாடப்பட்டவர். **'கௌடீ'** ரீதியில் எழுதப்பட்ட அவரது நூல்கள் ஜகத் ப்ரசித்தமானவை. வாக் சாதுர்யம், நீண்ட ஸமாஸங்கள், அத்புதமான கற்பனை வளம் என்று பல வகையான சிறப்புகளைக் கொண்டவை அவரது காவ்யங்கள். **'சண்டீ சதகம்'** என்னும் க்ரந்தத்தில் சக்தியின் புகழைப் பாடுகிறார். **'ஹர்ஷ சரித்ரம்'** என்னும் நூலில் ஹர்ஷ அரசனின் சரித்ரத்தைக் கூறுகிறார். **'காதம்பரி'** என்னும் உரை நடைக் காவ்யத்தில் மூன்று தலை முறைக் காதலை மிக அழகாக விவரிக்கிறார். அந்த காதம்பரியில் தான் சுக நாசர் என்னும் ரிஷி சந்த்ராபீடன் என்னும் இளவரசனுக்கு வாழ்வியல் தத்வங்களை மிக அழகாக உபதேசிக்கிறார். இதை அனைவரும் முக்யமாக இளைஞர்கள் படிக்க வேண்டும் என்பதற்காக மொழி பெயர்த்துத் தருகிறோம். மூலத்தையும் ராகத்தோடு படிக்கவும். மிக ரஸமாக இருக்கும். (ஆர்)

**गर्भेश्वरत्वम् अभिनवयौवनत्वम् अप्रतिमरूपत्वम् अमानुषशक्तित्वं चेति महती इयं खलु अनर्थपरम्परा । सर्वाविनयानाम् एकैकम् अपि एषाम् आयतनम्, किमुत समवायः ।**

பிறவிச்செல்வம், துடிப்பான வாலிபப் பருவம், நிகரில்லா வடிவழகு, மானிடத்தன்மைக்கும் மேலான வலிமை – என்ற இவை எல்லாம் பேரழிவின் வரிசை. இவற்றினுள் ஒவ்வொன்றுமே அவினயத்துக்கு காரணமாகும்; அப்படியிருக்க, உன்னிடத்தில் எல்லாவற்றின் சேர்க்கை எத்தகைய பேரழிவை விளைவிக்கும் என்று கூற வேண்டாம்.

**यौवनारम्भे च प्रायः शास्त्रजलप्रक्षालननिर्मला अपि कालुष्यम् उपयाति बुद्धिः। अनुज्झितधवलता अपि सरागा एव भवति यूनां दृष्टिः । अपहरति च वात्या इव शुष्कपत्रं समुद्धूतरजोभ्रान्तिः अतिदूरम् आत्मेच्छया यौवनसमये पुरुषं प्रकृतिः ।**

வாலிப பருவ ஆரம்பத்தில் புத்தியானது பெரும்பாலும் மிகவும் கூர்மையாக இருக்கும். சாஸ்திரங்கள் எனும் ஜலத்தினால் சுத்தம் செய்யப் பெற்று நிர்மலமாக இருந்த போதிலும் அந்த வாலிபனின் புத்தி கலங்கிவிடுகின்றது. இளைஞர்களின் பார்வையானது, கண்ணின் வெள்ளைப் பகுதியைப் போல் வெண்மையாக இருக்கின்றது. எனினும், ஆசை எனும் காரணத்தினால் கண்கள் எப்படி சிவப்பாகின்றதோ அதுபோல் இளம் பருவத்தினருக்கு அவருடைய மனதில் சில ஆசைகள் வருகின்றன. சுழற்க்காற்று எவ்வாறு புழுதியையும் காய்ந்த இலைகளையும் இழுத்துச் செல்லுமோ, அவ்வாறு வாலிபப் பருவத்தில் பிரகிருதியானது (மனிதனின் இயல்பானது) இரஜோப்பிராந்தியை (புழுதியின் மாயையை) உண்டு பண்ணி, பகுத்தறிவு எனும் கண்ணை மறைத்து, தனதிஷ்டப்படி மனிதனின் மனதையும் வெகுதூரம் சுகபோகங்களில் இழுத்துவிடுகிறது.

**इन्द्रियहरिणहारिणी च सततमब अतिदुरन्ता इयम् उपभोगमृगतृष्णिका । नवयौवनकषायितात्मनः च सलिलानि इव तान्येव विषयस्वरूपाणि आस्वाद्यमानानि मधुरतराणि आपतन्ति मनसः । नाशयति च दिङ्मोहः इव उन्मार्गप्रवर्तकः पुरुषम् अत्यासङ्गः विषयेषु ।**

எப்படி மான்கள் தண்ணீரை தேடி போகின்றதோ அது போன்று இங்கே இளம் வயதில் மனிதனின் அயம்புலன்களும் சுகபோகம் எனும் கானல் நீரை நோக்கிப் போய்ப் பேரழிவைச் சந்திக்கின்றன. இந்திரியங்கள் எனும் மானை இழுக்கும் போகம் எனும் கானல் நீரின் முடிவு பேரழிவைக் கொடுப்பதாகும். எவ்வாறு ஒரு மனிதனின் நாக்கு கசந்து இருக்கும்பொழுது ஜலம் இனிமையாக இருக்குமோ அவ்வாறு வாலிபத்தால் கலக்கமுற்ற மனிதனுக்கு சுகபோகங்கள் எனும் ஜலம் இனிமையாகத் தென்படுகிறது. சிற்றின்பங்களில் உண்டாகும் பெரும் பற்றானது திக்பிரமையை போல் கெட்ட வழியில் செல்லத் தூண்டி மனிதனை நாசம் செய்கிறது.

## गुरूपदेशः

**भवादृशाः एव भवन्ति भाजनानि उपदेशानाम् । अपगतमले हि मनसि स्फटिकमणौ इव रजनिकरगभस्तयः विशन्ति सुखम् उपदेशगुणाः । गुरुवचनम् अमलम् अपि सलिलम् इव महद् उपजनयति श्रवणस्थितं शूलम् अभव्यस्य । इतरस्य तु करिणः इव शङ्खाभरणम् आननशोभासमुदयम् अधिकतरम् उपजनयति ।**

உன்னைப் போன்ற அரசர்களும் செல்வந்தர்களும் வாலிபர்களும் உபதேசங்களுக்கு பாத்திரம் ஆகின்றனர். மாசற்ற ஸ்படிகமணியில் சந்திர கிரணங்கள் எவ்வாறு நுழைகின்றனவோ, அதுபோல் மாசற்ற உன்போன்றவரின் மனதில் குரு உபதேசங்கள் சென்றடைகின்றன. தூய நீர் எவ்வாறு காதுக்குள் சென்றால் பெரும் வலியை ஏற்படுத்துமோ அதுபோல் மூர்க்கர்களுக்கு குருவின் நிர்மலமானச் சொல் இருந்த பொழுதிலும் காதில் நுழைவதே இல்லை நுழைந்தாலும் பெரும் வலியை ஏற்படுத்துகிறது. மற்றவனுக்கோ (புத்திசாலிக்கோ) அதே குரு உபதேசமானது முகத்திற்கு அதிகமான பொலிவை அளிக்கிறது. அதாவது யானைக்கு காதில் அணியும் சங்கு ஆபரணம் எவ்வாறு முகத்திற்கு ஒரு அழகை கொடுக்கிறதோ அது போன்றது.

**हरति च सकलम् अतिमलिनम् अपि अन्धकारम् इव दोषजातं प्रदोषसमयनिशाकरः इव गुरूपदेशः प्रशमहेतुः । वयःपरिणामः इव पलितरूपेण शिरसिजजालम् अमलीकुर्वन् गुणरूपेण तदेव परिणमयति । अयमेव च अनास्वादितविषयरसस्य ते कालः उपदेशस्य । कुसुमशरप्रहारजर्जरिते हि हृदये जलम् इव गलति उपदिष्टम् । अकारणं च भवति दुष्प्रकृतेः अन्वयः श्रुतं वा विनयस्य । चन्दनप्रभवः न दहति किम् अनलः । किं वा प्रशमहेतुना अपि न प्रचण्डतरीभवति वडवानलः वारिणा ।**

வெகுமலினமான இருட்டை எவ்வாறு பிரதோஷ நேரத்தில் உதிக்கின்ற சந்திரன் அகற்றுமோ, அதுபோல் குருவின் உபதேசமானது எல்லா தோஷக்கூட்டங்களை போக்குகிறது. நரை எனும் உருவத்தால் கேச பாசங்களை எவ்வாறு மூப்பு சுத்தமாக்குகிறது அவ்வாறே குரு உபதேசம் அந்தத் தோஷங்களையே குண ரூபமாக மாற்றுகிறது. சிற்றின்பங்களின் சுவை சிறிதும் அறியாத உனக்கு உபதேசம் செய்வதற்கு இதுதான் தகுந்த காலம் காலம். மன்மதனின் புஷ்ப பானங்களினால் அடிக்கப்பட்டு சிதறிய இருதயத்தில் நீர் போல் உபதேசம் வெளிநழுவுகிறது. கொடிய சுபாவம் உள்ளவனுக்கு நல்ல குலமோ படிப்போ இணையத்திற்கு காரணமாகாது. சந்தன மரத்தில் உண்டாகும் தீயானது தகிக்காமல் இருக்குமா என்ன? கடலில் இருக்கும் வாடவாக்கினி எனும் பெரும் தீயும், தன்னை அடக்கும் நீரால் உக்கிரமாக எரியவில்லையா?

**गुरूपदेशश्च नाम पुरुषाणाम् अखिलमलप्रक्षालनक्षमम् अजलं स्नानम्, अनुपजातपलितादिवैरूप्यम् अजरं वृद्धत्वम्, अनारोपितमेदोदोषं गुरूकरणम्, असुवर्णविरचनम् अग्राम्यं कर्णाभरणम्, अतीतज्योतिः आलोकः, नोद्वेगकरः प्रजागरः ।**

குரு உபதேசம் என்பது மனிதர்களுக்கு எல்லா மலங்களையும் அழிக்க வல்லமை கொண்ட நீரில்லா ஸ்னானம், நரை முதலிய விகாரங்கள் இல்லா முதிர்வில்லா மூப்பு, கொழுப்பின் தோஷம் ஏற்றப்படாத மேன்மை, தங்கத்தினால் செய்யப்படாத உத்தமமான ஆபரணம், சூரியன் சந்திரன் போல ஜோதி ஸ்வரூபங்களுக்கு அப்பாற்பட்ட வெளிச்சம், பரபரப்பை உண்டு பண்ணாமல் இருக்கும் விழிப்புணர்வு.

**विशेषेण तु राज्ञाम् । विरलाः हि तेषाम् उपदेष्टारः । प्रतिशब्दकः इव राजवचनमब अनुगच्छति जनः भयात् । उद्दामदर्पश्वयथुस्थगितश्रवणविवराः च उपदिश्यमानम् अपि ते न शृण्वन्ति । शृण्वन्तः अपि च गजनिमीलितेन अवधीरयन्तः खेदयन्ति हितोपदेशदायिनः गुरून् । अहङ्कारदाहज्वरमूर्च्छान्धकारिता विह्वला हि राजप्रकृतिः । अलीकाभिमानोन्मादकारीणि धनानि । राज्यविषविकारतन्द्राप्रदा राजलक्ष्मीः ।**

அரசர்களுக்கு இது மிகவும் இன்றியமையாதது ஏனெனில் அவர்களுக்கு உபதேசம் செய்பவர் மிகக் குறைவு. மனிதரோ பயத்தினால் அரசின் கட்டளையை எதிரொலி போல் பின்தொடர்கிறான். ஒருக்கால் உபதேசம் பெற்றால் அதை அந்த மன்னர்கள் கர்வம் எனும் புண்ணின் வீக்கத்தால் அடைக்கப்பட்ட காதுகளைக் கொண்டவர்களாகக் கேட்பதில்லை. கேட்கும் பொழுது மதயானையைப் போல் கண்ணை மூடிக்கொண்டு உபதேசம் செய்யும் குருமார்களை அவமதித்துத் துன்பப்படுத்துகிறார்கள். அகங்காரம் எனும் தாபஜ்வரத்தால் உண்டான் மோகத்தால் மயங்கி இருளடைந்த குழப்பம் தான் அரசனின் சுபாவம். செல்வங்கள், பொய்யான அபிமானத்தால் போதை அளிப்பவை. ராஜ்யலக்ஷ்மீ ராஜ்யம் எனும் விஷவிகாரம் சோம்பலை தருபவள்.

(தொடரும்)

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 27

## ஸ்ரீ சித்ஸுகாசார்யர்

அத்வைத ஆசார்ய பரம்பரையில் அரிய பல நூல்களை அருளியவர் ஸ்ரீ ஸித்ஸுகாசார்யர். அமுத்தமான வாதங்களைத் திருத்தமாக எடுத்துக் கூறி பூர்வாசார்யர்களின் நிருபணங்கள் எவ்வாறு சாஸ்திர நெறியினின்று சிறிது கூட வழுவாமல் இருக்கின்றன என்பதை நிரூபித்தவர். இவர் கௌடேச்வராசார்யர் என்று அழைக்கப்பட்ட ஞானோத்தமர் என்பவரின் சீடராக அறியப்படுகிறார். சுகப் ப்ரகாசமுனி இவரது சீடர். தத்வதீபிகா எனப்படும் தத்வ ப்ரதீபிகா இவரது நூல்களுள் சிறந்ததாகக் கருதப்படுகிறது. அத்வைத வாதத்தைக் கண்டிக்கும் த்வைதிகளான தார்க்கிகர்களுக்குத் தக்க வாதங்கள் மூலம் இந்நூலில் பதிலளித்துள்ளார்.

த்வைத ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த வ்யாஸராயர் இவரது வாதங்களைக் கண்டித்து மறுக்கும் விதமாக ந்யாம்ருதம் என்ற நூலை எழுதினார். பின்னர் வந்த ஸ்ரீமதுஸுதன ஸரஸ்வதி வ்யாஸராயரின் வாதங்களில் உள்ள பலஹீனங்களை எடுத்துக் காட்டி கண்டித்துள்ளார். பிரபலமான தத்வ தீபிகா தவிர வேறுபல நூல்களை ஸ்ரீ சித்ஸுகாசார்யர் எழுதியுள்ளார். அதிகரண ஸங்கதி, அதிகரண மஞ்ஜரி, நைஷ்காம்ய ஸித்தி, வியாக்யானம், பாவதத்வ ப்ரகாசிகா, பாவத்யோதநிகா என்ற பெயருடைய பஞ்சபாதிகா விவரண வியாக்யானம், நிபந்தந எனப்படும் ப்ரமாண ரத்னாவளி வியாக்யானம் அபிப்ராயப்ரகாசம் எனப்படும் ப்ரஹ்மஸித்தி வியாக்யானம், பாவப்ரகாசிகா என்ற பெயரில் ப்ரஹ்ம ஸுத்ரங்களுக்கான உரை, வேதாந்த, ஸித்தாந்த, காரிகா மஞ்ஜரி, ஆனந்த போதரின் 'ந்யாய மகரந்தம்' என்ற நூலுக்கான உரை, ஸ்ரீ ஹர்ஷரின் கண்டன கண்ட காத்யத்திற்கான உரை, ஸத் தர்ஸன ஸங்க்ரஹ வ்ருத்தி, ப்ரஹ்ம ஸ்துதி, சித்ஸுகி என்ற பெயரில் விஷ்ணு புராணத்திற்கு வியாக்யானம் என்று அரிய பல நூல்களைப் படைத்துள்ளார்.

கி.பி 13-ஆவது நூற்றாண்டின் முற்பகுதியில் இவர் வாழ்ந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. ஸ்ரீ ஹர்ஷரைப் பின் தொடர்ந்து அத்வைத சித்தாந்தத்தை முறையாக ஆழமான வாதங்களின் மேல் நிறுவியவர் ஸ்ரீ சித்ஸுகர். இவர் அமைத்துக் கொடுத்த பாதையிலேயே இவரைத் தொடர்ந்து வந்த ந்ருஸிம்மாஸரமி, நாராயணாஸ்ரமி, ஸ்ரீ மதுஸுதன ஸரஸ்வதி போன்ற உரையாசிரியர்கள் பயணித்தனர். கி.பி.11-ஆவது நூற்றாண்டிற்கு முன்னர் வரையில் அத்வைதிகளுக்கு பௌத்தர்கள்,

பூர்வமீமாம்ஸகர்கள், நையாயிகர்கள் போன்றவர்களின் வாதங்கள் உபநிஷத் ஸம்மதமற்றவை என வாதிட வேண்டியிருந்தது. கி.பி. 11-ஆவது நூற்றாண்டிலிருந்து துவங்கி ந்யாய, வைசேக்ஷிகர்களையும், பிறகு விசிஷ்டாத்வைதிகள், த்வைதிகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

நம்மால் பார்த்து அனுபவிக்கப்படும் உலகை இப்படித்தான் இது இருக்கிறது என்று தீர்மானித்துச் சொல்ல முடியாது. அறிதல், அறிபவன், அறியப்படும் பொருள் இம்மூன்றும் இணைந்ததே உலகம்.

இவற்றைக் கடந்து நான்காவதாக எதுவுமில்லை. இம்மூன்றும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. இம்மூன்றிற்கும் தனித்த இருப்பு கிடையாது. இம்மூன்றின் ஸத்யத்தன்மையும், நிரூபிக்கப்பட முடியாதது. இம்மூன்றின் இருப்பிற்கும் காரணமாக இருக்கும் ஆத்ம சைதன்யமே நிஜமான இருப்பாகும். ஸ்ரீ ஹர்ஷர் நையாயிகர்களின் வாதங்களில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டி கண்டித்தார். ஸ்ரீ சித்ஸுகாசார்யர் நையாயிகர்களின் வாதங்களும், விளக்கங்களும் ஏற்க இயலாதவை நடக்க இயலாதவை என நிரூபித்தார். அத்வைத ஸித்தாந்தத்தின் அரிய பெரிய உண்மைகளை அநாயாஸமாக எடுத்துரைக்கும் இவரது பாங்கு மிகவும் போற்றத்தக்கது. இவரது நூல்கள் அத்வைத ஸித்தாந்தத்திற்கு ரக்ஷகமாகவும், அதனைப் பிரகாசப்படுத்தும் ஒளிவிளக்கு போலவும் இருக்கின்றன என்றால் மிகையாகாது.

தத்வ ப்ரதீபிகா நூலின் முதல் அத்யாயத்தில் ஆத்ம சொரூபத்தின் ஸ்வப்ரகாசத் தன்மையையும், ஸம்வித் சொரூபத்தையும், அக்ஞானத்தின் இருளடர்ந்த தன்மையையும் விவரிக்கிறார். இரண்டாவது அத்யாயத்தில் நையாயிகர்களின் வாதங்களைக் கண்டிக்கிறார். மூன்றாவது அத்யாயத்தில் ப்ரஹ்ம ஞானம் பற்றியும், ஞானம் ஒன்றினால் மட்டுமே முக்தி கிடைக்கும் என்பது பற்றியும் கூறுகிறார். முக்திநிலை பற்றி நான்காவது அத்யாயத்தில் எடுத்துரைக்கிறார். அக்ஞானத்தின் ஸூக்ஷ்ம வடிவம் அவித்யா லேசம் எனப்படும். **‘ப்ரபஞ்சஸ்ய பரமார்த்த ஸத்வ ப்ரம ஹேது:’** என்கிறார். அதாவது காணப்படும் ஸ்தூல ப்ரபஞ்சம் ஸத்யம் எனக் கருதுவது அவித்யாலேசத்தின் முதல் வடிவம். இது பரோக்ஷ ஞானத்தால், அதாவது சாஸ்த்ர உபதேசத்தால் நீங்கும் **‘அத்வைத ஸத்யத்வ அத்யவஸாயேந’** இதற்கு அடுத்த நிலையில், இது ஜீவனை உலகில் பயனை உத்தேசித்துச் செயற்புரியத் தூண்டுகிறது. அவித்யையின் இந்த இரண்டாவது சொரூம் அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தால், அதாவது

**‘நான் ப்ரஹ்மமாயிருக்கிறேன்’** என்ற அனுபவ ஞானத்தால் நீங்கும் **‘ஸாக்ஷாத்காரேண நிவர்த்ததே’.** இதன் மூன்றாவது வடிவம் மாயை. தனக்கு அந்நியமாக ஒரு வஸ்து இல்லாத போது இருப்பது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துவது மாயை. ஜீவன் முக்தி நிலையில் கூட இது தோன்றிக் கொண்டு இருக்கும். **‘அபரோக்ஷப்ரதிபாஸ போக்ய அர்த்தாபாஸ ஜனகஸ்து மாயாலேஸோ ஜீவன் முக்தஸ்ய அநிவ்ருத்த:’**

அவித்யை மூன்று விதமாக வெளிப்படும். 1. அக்ரஹணாத்மக, 2. விபரீதக்ராஹக: , 3. ஸம்ஸயோபாஸ்தாபக. உண்மையை காணாதிருத்தல், உண்மையை மாறுபட்டு அறிதல், உண்மையை சந்தேகத்துடன் காணுதல் இம் மூன்றுமே தமஸின் காரியம்.

ஸ்ரீ சித்ஸுகரின் வாதத் திறமையும், சொற்களைக் கையாளும் **லாவகமும்** பிரஸித்தி பெற்றவை. எல்லோருடைய பாராட்டுகளையும் பெற்றவை. அத்வைத தத்துவத்தையும், மாயாவாதத்தையும் மறுப்பவர்களின் வாதங்களிலும், போதங்களிலும் உபநிஷத் கருத்துக்களுக்கு மாறுபட்டு இருப்பவற்றை தெளிவாக எடுத்துக் காட்டி ஔபநிஷத மதமே அத்வைதம் என்று ஸ்தாபிக்கும் பாங்கு மிகவும் போற்றத்தக்கது. இவரைத் தொடர்ந்து அத்வைத ஆசார்ய பரம்பரையில் தனி இடம் பெற்று வசிப்பவர் ஸ்ரீ அனுபூதிஸ்வரூபாசார்யர்.



# பெண்கள் தெரிந்து கொள்ள....

வாழ்க்கை என்பது தம்பதிகளாக வாழ்வது தான். ஆண்கள் இந்தக் காலத்தில் கல்யாணம் செய்து கொள்ளாமலேயே பந்தமில்லாமல், பொறுப்பில்லாமல் சுதந்திரமாக வாழலாம் என்று பலரும் நினைக்கிறார்கள். அதேபோல் பெண்களும் கல்யாணம் செய்து கொள்ளாமலேயே ஏதோ உத்யோகம் செய்து கொண்டு, சம்பாதித்து சுதந்திரமாக ஒரு பந்தத்திலும் மாட்டிக் கொள்ளாமல் இருக்கலாம் என்று நினைக்கிறார்கள். ஆனால் உண்மையாகப் பார்க்கும் போது கல்யாணம் செய்து கொள்ளாத ஆணோ, பெண்ணோ வாழ்க்கையில் பல பொறுப்புகளையும், பல பந்தங்களையும் பல கஷ்டங்களையும் ஏற்றுக் கொண்டிருப்பதானது கண்கூடாகத் தெரிகிறது.

கல்யாணமான தம்பதிகளுக்கு வரக் கூடிய இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு தம்பதிகளே, பரஸ்பரம் பேசி பலவித பிரச்னைகளை, கஷ்டங்களை தீர்த்துக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. கணவனும், மனைவியும், சொல்லும் அதன் விளக்கமும் போல, இரு உடல் ஒரு மனதாக இருக்க வேண்டும்.

எப்படி ஒரு கொம்பை ஆதாரமாகக் கொண்டு கொடி படருகிறதோ, அதுபோல் கொம்பில்லாமல் கொடியில்லை, கொடியில்லாமல் கொம்பில்லை என்பது போல் ஒன்றுக்கொன்று ஆதாரமாக இருந்து கொள்ள வேண்டும். ஒரு கொடியைப் படரவிட்டால்தான் கொம்பிற்குப் பெருமை. அதன்மேல் (கொம்பின் மேல்) கொடிபடர்ந்தால் தான் கொடிக்குப் பெருமை. கொடி வேறு, கொம்பு வேறாக இருந்தாலும் எப்படி ஒன்றுக்கொன்று ஆச்ரயித்துக் கொண்டிருக்கிறதோ அதுபோல் கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஆச்ரயித்து வாழ வேண்டும்.

கல்யாணத்திற்காக பெண் பார்ப்பதற்கு முன்பு வரை பெண்ணிற்கோ, ஆணிற்கோ பரஸ்பரம் எந்தவித நம்பிக்கையோ, ஆதாரமோ ஏற்படுவதில்லை. பரஸ்பரம் பார்த்துக் கொண்ட பிறகே நம்பிக்கை ஏற்படுகிறது. தற்காலத்தில் பல நாட்கள் பழகிய பிறகு, நம்பிக்கை ஏற்படுகிறது.

எப்படியிருந்தாலும் பிறந்தது முதல் கல்யாணம் முன்புவரை தாய் தந்தையரை நம்பியிருந்தவர்கள், கல்யாணம் என்று ஏற்பட்ட பிறகு தாய் தந்தையர்களையும் அரவணைத்து வாழ வேண்டியவர்கள், இல்லறம் நடத்துபவர்கள்.

அப்படியிருந்தும் கூட தற்கால நிலையிலே புதிய கல்யாணம் செய்து கொள்ளக் கூடியவர்கள் பரஸ்பரம் ஆணும், பெண்ணும் பார்த்து, பேசி நம்பிக்கை ஏற்பட்டு, இரண்டு பக்கங்களிலும் உள்ள தாய், தந்தையர்களை விட்டுவிட்டு, வாழ்க்கை நடத்தக் கூடிய அளவுக்கு புதிய தம்பதிகளிடையே இன்றைக்கு அன்பையும், பாசத்தையும் நம்பிக்கையையும், பார்க்க முடிகிறது. இப்படி வாழ்பவர்களிடம் கூட சில சில மனோ வேற்றுமைகள் அவ்வப்போது ஏற்படுவது சகஜம். அவைகளை பெரிதாக்கிக் கொள்ளாமல் கல்யாணத்திற்கு முன்பு எந்த நம்பிக்கையும், பாசமும் இருந்ததோ அதைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால், சிறு அபிப்பிராய பேதங்கள் கூட மாறி வாழ்க்கையில் அமைதியும், சாந்தியும் கிட்டும். அந்த அன்பிலும், நம்பிக்கையிலும் விரிசல் கண்டு விட்டால் அப்போது குடும்பம் அமைதியற்ற நிலைமையை அடைந்து விடுகிறது. இப்படி ஏற்படாமல் இருப்பதற்குத் தம்பதிகள் பரஸ்பரம் ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்தும், தியாகம் செய்தும் வாழ்க்கையை நடத்தப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தன்னுடைய கணவனின் நன்மைக்காகவே அவருடைய சுகதுக்கத்தில் முழுமையில் பங்கு கொண்டு, தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து காட்டியவர்களின் வரலாற்றை நாம் நினைத்துக் கொள்ள வேண்டும். அதுபோல் தன் மனைவியின் சந்தோஷத்திற்காகவே எவ்வளவு பெரிய கஷ்டங்களையும், தியாகங்களையும் கணவன் செய்கிறான் என்பதையும் அவ்வப்போது நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

அரிச்சந்திரன் தன் வாழ்நாள் முழுவதும் பொய் சொல்லாமல் இருப்பதற்காக, தன்னுடைய ராஜ்யம் அனைத்தையும் இழந்து கஷ்டப்படும் போது, அந்தக் கஷ்டத்தைப் பகிர்ந்து கொள்வதில் அரிச்சந்திரனுடன் உறுதுணையாக சந்திரமதி இருந்தாள். மேலும் அந்தக் கணவனுடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு வேறொரு வீட்டில் வேலைக்காரியாகவும் இருந்தாள். அது மாத்திரமல்லாமல் ராஜா அரிச்சந்திரனின் குழந்தை இறந்த போது, குழந்தையை இடுகாட்டிற்கு எடுத்துச் சென்ற போது, கடமையே பெரிதென அப்போதும் சந்திரமதியிடம் கடமைக் கேற்றவாறுதான் நடந்து கொள்கிறான். அரிச்சந்திரன் சரித்திரத்திலிருந்து சாமானிய ஜனங்கள் அறிந்து கொள்வது எந்த சமயத்திலும் அரிச்சந்திரன் பொய் சொல்ல மாட்டான் என்பதுதான். ஆனால் நாம் அறிந்து கொள்ள வேண்டியதோ கணவனுக்காக சந்திரமதி அத்தனை சுகதுக்கங்களையும் ஏற்றுக் கொண்டு, அவனுடைய எண்ணத்திற்காக, மனது சந்தோஷத்திற்காக வாழ்ந்தவள் என்பதையே.

இதேபோலத் தான் பீமனிடம் ஒரு முறை திரௌபதி எங்கிருந்தோ புஷ்பத்தின் வாசனை வருகிறது. அந்த புஷ்பம் தனக்குத் தேவை என்று கேட்டாள். இதற்காகப் பல காடுகளைக் கடந்து, பல துன்பங்களை அடைந்து வழியிலே ஆஞ்சநேயர் படுத்திருந்த நிலையில் அவர் வாலைக் கூட அசைக்க முடியாமல், அவருடன் நட்பு கொண்டு, அவர் மூலமாக புஷ்பம் இருக்கும் இடத்தை அறிந்து கொண்டு அந்த புஷ்பத்தை பீமன் கொண்டு கொடுக்கிறான்.

ராமாயணத்திலேயும் ராமன் காட்டிற்குச் செல்லும்போது, பதினான்கு ஆண்டு காலம் சீதையும் கூடவே ராமனோடு சென்று, அத்தனை இன்ப துன்பங்களையும் அனுபவிக்கிறாள். இலங்கைக்குச் சீதை ராவணனால் எடுத்துச் செல்லப்பட்ட பிறகும், ராமபிரான் சீதையினிடம் வைத்திருந்த அன்பு போல, தன் மனைவியிடத்தில் வேறு யாரும் வைத்திருக்க மாட்டார்கள் என்று ராமாயணம் கூறுகிறது. இறைவனுடைய அவதாரமாக ஸ்ரீராமன் இருந்த போதிலும் மனுஷ்ய வேஷம் எடுத்ததனால் மனிதன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர் இராமபிரான்.

லஷ்மணன் மூலம் சீதை காணவில்லை என்பதை அறிந்த போது மேகம், சூரியன், செடி, கொடி, மரம் போன்ற ஒவ்வொன்றையும் பார்த்து 'பிராணநாயகி எங்கே? எங்கே?' என்று ராமன் கதறுகிறான். இது போலத் தான் சீதை மீது ராமனுக்குச் சந்தேகம் வந்த போது கூட, ராமனின் எண்ணத்தையும், சந்தேகத்தையும் நிவர்த்தி செய்வதே தன் கடமை என்று எண்ணி நெருப்பில் விழவும் தயாராகிறாள் சீதை.

வாழ்க்கை என்றால் சந்தேகங்கள் அபிப்ராய பேதங்கள் இருப்பது சகஜம். அவைகளைப் பெரிதுபடுத்தாமல் இறைவன் கொடுத்த புத்தியை நன்றாக உபயோகித்து, ஒரு தடவைக்குப் பல தடவை சிந்தனை செய்து, பொறுமையுடன், பொறுப்புடன் ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன், ''நான் எவ்வளவு நாள் விட்டுக் கொடுப்பது? நீங்கள் விட்டுக் கொடுத்தால் என்ன?'' என்று சொல்லிக் கொள்ளாமல் இரு உடல் ஒரு மனதுடன், சொல்லும் பொருளும் போலும், உடலும் நிறமும் போலும், கொம்பும் கொடியும் போலும், சமுத்திரத்தில் வரும் அலை எப்படி வந்து போய் ஒன்றா கிறதோ அது போல், நம்மிடையே ஒருவருக்கொருவர் மன ஒற்றுமையுடன் வாழ்வதே வாழ்க்கை.

(தொடரும்)

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

பி. கே. வெங்கடாத்ரி



என் சிறு வயது முதலே பெரியவாளை சந்திக்க சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. என் 35 வயதுக்குப்பிந் தான் அவருடன் நெருங்கிப் பழக வாய்ப்பு கிடைத்தது.

அவர்களே என் பெயரைக் கூப்பிட்டு பேசிய சந்தர்ப்பமும் உண்டு. ஒரு சமயம் ஒருவரிடத்தில் இவர் மாமா சுப்ரமணியம் இவர் மருமான் அவரும் சுப்ரமணியம் என்று வேடிக்கையாகக் கூறுவார். இப்போது அந்த சுப்ரமணியத்தைப் பற்றித்தான் கூறப்போகிறேன்.

என் மருமான் ஆந்த்ரப்ரதேசத்தில் ஐ. ஏ. எஸ் அதிகாரியாக இருந்தான். அவனுக்கு திருப்பதி தேவஸ்தானத்தில் executive officer ஆக பணிபுரிய ஆணை வந்த இந்த நல்ல செய்தியை பெரியவாளுக்குச் சொல்லி அனுக்ரஹம் பெற பணித்தேன்.

அவனும் அவ்வாறே செய்தான். பெரியவா என்னென்ன சொன்னார்களோ அவை எல்லாவற்றையும் ஸ்ரத்தையுடன் செய்தான். பல வருடங்களுக்குப் பிறகு டெல்லி சர்கார் அவனை டெல்லியில் பணிபுரிய எடுத்துக் கொண்டது.

ஹெல்த் மினிஸ்டிரியில் அடிஷனல் செகரடரியாக நியமிக்கப்பட்டான். 1989ஆம் வருடம் எனக்கு மூன்றாம் நபர் மூலம் ஓரதிர்ச்சியான தகவல் அவனைப் பற்றி வந்தது. த்ரிபுராவின் தலைநகரான அகர்தலாவில் அவன் மண்டையில் பலமாகத் தாக்கப்பட்டு மருத்துவமனையில் உள்ளான் என்றிருந்தது. அவன் த்ரிபுராவிற்குப் போனது தெரியாது. அவன் உறவினர்களிடமிருந்தும் சரியான தகவல் வரவில்லை. உடனே ஆசார்யாளை மனமுருகப் ப்ரார்த்தித்தேன்.

காஞ்சீபுரத்திற்குப் போக முடியவில்லையே என்று ஏக்கத்துடன் இருந்த எனக்குப் பக்கத்து வீட்டார் 'நாங்கள் காஞ்சீபுரம் போகிறோம் வருகிறீர்களா' என்று கேட்டது புத்துயிர் அளித்தது. அங்கே ஆசார்யாள் சுவரில் சாய்ந்து அமர்ந்திருந்தார். எல்லாருக்கும் நல்ல தரிசனம் கிடைத்து. ஒருவர் ஒருவராக விசாரித்தார்கள். என் முறை வந்தது. என் மருமானைப் பற்றி அவரிடம் கூறினேன். அவன் திருப்பதியில் தானே இருந்தான். எப்போ திரிபுரா போனான் எப்படி அடிபட்டது? என்று வினவினார்கள். நான் ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை. பெரியவா அனுக்ரஹத்தில பிழைச்சிக்கணும் என்று கேட்டுக் கொண்டேன். ஆசார்யாள் ஒரு நிமிடம் த்யானத்தில் இருந்த பின் புன்முறுவலுடன் என்னைப் பார்த்து இரு கைகளையும் உயர்த்தி ஆசீர்வதித்தார்கள்.

கவலை நீங்கிய நான் மருமகனின் டில்லி விலாஸத்திற்கு ஒரு கடிதம் போட்டேன். இக்கடிதம் அவன் மனைவி கையில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அதில் ஆசார்யாள் அனுக்ரஹத்தைப் பற்றி எழுதியிருந்தேன். மூன்று மாதங்களுக்குப் பிறகு அவளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

( தொடரும்)

**களவின்கண் கன்றியகாதல் விளைவின்கண்**
**வீயா விழுமம் தரும்**

களவு செய்து பிறர் பொருள் கொள்ளுதல் ஒருவனுக்கு உள்ள மிகுந்த விருப்பம், பயன் விளையும் போது தொலையாத துன்பத்தைத் தரும்.

(குறள் : 284)

திருட்டுக்கு ஒப்பான பெரும் பாவம் வேறு இல்லை. திருட்டு இவ்வுலகில் ப்ரஹம ஹத்திக்கு ஒப்பானது ஆகும்.

(மகாபாரதம் : சாந்தி பர்வம்)

# கற்பின் சிகரங்கள் பேசினால்

*வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்*

### ஆதாரம்: வால்மீகி இராமாயணம்
### அயோத்யா காண்டம் ஸர்கம் 117, ஸர்கம் 118

வால்மீகி இராமாயணத்தில் பொருளார்ந்த உரையாடல்களைக் காணலாம். குறிப்பாக அக்காலப் பெண்களின் அறிவார்ந்த பேச்சுக்கள் காலத்தை வென்று நிற்கும். கவின்மிகு சொற்றொடர்கள். நம் நாட்டின் பண்டைய நாகரிகத்தில் பெண்கள் மனத்திண்மையை நாம் புரிந்து கொள்ளத் துணை நிற்பவை. அவைகளை இக்காலப் பெண்கள் படித்துணர்ந்து அத்தகு உயர்பண்பாட்டு நாகரிகத்தை நாம் ஏன் பின்பற்றக் கூடாது? என்று சிந்திக்க வேண்டும். அதற்காகவே இரண்டு பெண்களின் அளிக்க பேச்சுக்களைப் பொருளோடு கூற விரும்புகிறேன். முதல் பேச்சு அயோத்யா காண்டம் ஸர்கம் 117இல் அனசூயா தேவியின் பேச்சுக்களும் அதே அயோத்யா காண்டம் ஸர்கம் 118இல் சீதா தேவியின் பேச்சுக்களும் ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பேச்சு என்றால் மிகையாகாது.

அத்ரி மஹரிஷியின் மனைவி அனசூயா தேவியின் உரை :-

1. **தாமத்ரிபத்னீம் தர்மக்ஞா மபிசக்ராமக மைதிலீ**
**ஸ்யிதிலாம் வலிதாம் வ்ருத்தாம் ஜரா பாண்டுர மூர்த்தஜாம் ॥**

அந்த தர்மபத்னியும் அறமறிந்தவளும் மூப்பினால் இளைத்தவளும், சரீரத்தில் சுருக்கங்களை உடையவளும், வயதின் மூப்பினால் வெண்மையான கூந்தல் உடையவளுமான அனஸூயாவை அடைந்தாள்.

**ஸததம் வேபமானாங்கீம் ப்ரவாதே கதலீம் யதா ॥**

அந்த அனஸூயையானவள் பலத்த காற்றினால் அசையும் வாழைமரம் போல எப்போதும் நடுங்கும் சரீரத்துடன் காணப்பட்டாள்.

2. **ஸீதா மஹாபாகாம் அனஸூயாம் பதிவ்ரதாம் ।**
**அப்யவாதயத வ்யக்ரா ஸ்வநாம ஸமுதுஹாரத் ॥**

ஸீதை, கொடுத்து வைத்த பெரியவளான பதிவ்ரதையான அனஸூயாவை நோக்கி விரைவாகச் சென்று தன் பெயரைச் சொல்லி நன்கு அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

**3. அபிவாத்ய ச வைதேஹீ தாபஸீம் தாமனிந்திதாம் ।**
**பத்தாஞ்ஜலி புடா த்ருஷ்ட்வா பர்யப்ரச்ச தனாமயம் ॥**

தபஸ்வினியும், குறையே சொல்ல முடியாதவளுமான அந்த அனஸூயாவை ஸீதை முறைப்படி வணங்கி கை கூப்பியவளாய் அவர்கள் நலத்தை விசாரித்தாள்.

**4. தத: ஸீதாம் மஹாபாகாம் த்ருஷ்ட்வா தாம் தர்மசாரிணீம் ।**
**ஸாந்த்வயந்த்யப்ரவீத் த்ருஷ்டா திஷ்டயா தர்மமவேக்ஷஸே ॥**

பின்னர் ஸீதையைப் பார்த்து அந்த தர்மசாரிணியான அனஸூயா அமைதிப்படுத்தும் நிலையில் பார்த்து ப்ரத்யக்ஷமாக தர்மத்தை அனுசரிக்கிறாய் என்றாள்.

**5. த்யக்த்வா ஜாதி ஜனம் ஸீதே மானம்ருத்திம் ச மானினீ ।**
**அவருத்தம் வனே ராமம் திஷ்டயா த்வாமனு கச்சஸி ॥**

அம்மா! மக்கள், உற்றார் இவர்களை விட்டு பெருமை, சீர் இவைகளைத் துறந்து பெருமை மிக்கவளே! இராமனை விடாமல் மனவுறுதியுடன் பெண்களுக்கான தர்மத்தைப் பின்பற்றுகிறாய்.

**6. நகரஸ்தோ வா வனஸ்தோ வா பாபோவா யதி வா ஸுப:**
**யாஸாம் ஸ்த்ரீணாம் ப்ரியா பர்த்தா தாஸாம் லோகாமஹோதயா ॥**

கணவன் நகரத்தில் இருந்தாலும், வனத்தில் இருந்தாலும், தீயவனாய் இருந்தாலும், நல்லவனாய் இருந்தாலும், எந்தப் பெண்கள் கணவரிடம் ப்ரியமாக நடந்து கொள்கிறார்களோ அந்தப் பெண்களின் உலகம் புண்ய லோகமே.

**7. து:ஸீல: காமவ்ருத்தோவா தனைர் வா பரிவர்ஜித: ।**
**ஸ்த்ரீணாமார்ய ஸ்வபாவாநாம் பரமம் தைவதம் பதி: ॥**

கெட்ட நடத்தை உடையவனோ, காமாந்தகனோ, செல்வந்தனோ செல்வத்தை இழந்தவனோ, பெண்களுக்கு அதிலும் நல்லொழுக்கப் பெண்களுக்கு கணவன் தான் உயர்ந்த தெய்வம். இது இந்நாட்டின் மண்ணில் ஊறிய ஒன்று.

இத்தனை அறிவுரைகளையும் கூறிய பதிவ்ரதையாம் அனஸூயைக்குச் சீதை சொன்ன பதில்களையும் காண்போம். இது அயோத்யா காண்டம் 118வது ஸர்கம் ஸ்லோகங்கள் 2 (முதல் 4; மற்றும் 7 முதல் 11 )

**8. நைததாஸ்சர்யம் ஆர்யயா யன்மாம் த்வமனு பாஷஸே ।**
**விதிதம்து மமாப்யேதத் யதா நார்யா: பதிர் குரு: ॥॥**

நல்லொழுக்க சீலராகிய தாங்கள் என்னிடம் கூறிய வாக்கியங்கள் ஆச்சரியமானவைகள். கணவனே தெய்வம் என்று வாழும் பெண்களால் ஏற்கனவே இவைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**9. யத்யப்யேஷ பவேத்பர்த்தா மமார்யே வ்ருத்த வர்ஜித: ।**
**அத்வைதமுப சர்தவ்யஸ் ததாப் யேஷ மயா பவேத் நந**

என்னைப் போன்ற கற்புடையப் பெண்களுக்கு நல்ல கணவனை அடைந்தவர்களுக்கு இரண்டாவது தடவை நினைவூட்டுவதாகவே இதை நான் கருதுகிறேன்.

**10. கிம் புனர் யோ குணைஸ்லாக்ய: ஸானுக்ரோ சோஜிதேந்த்ரிய: ।**
**ஸ்த்திராநுராகோ தர்மாத்மா மாத்ருவத் பித்ருவத் ப்ரிய: ॥**

பின் என்ன! குணவானும், பரிவுள்ளவரும், புலனடக்கம் உள்ளவரும், நிலையான பற்றுள்ளவரும், தர்மாத்மாவும், தாய் போலவும், தந்தை போலவும் உள்ளவருமான ஒருவர் விஷயத்தில் எப்படி தர்மம் மீறி நடக்க முடியும்.

**11. ஆகச்சந்த்யாஸ்ச விஜனம் வனமேவம் பஹாவஹம்**
**ஸமாஹிதம் மே ஸ்வஸ்ரவா ச ஹ்ருதயே தத் த்ருதம் மஹத் ॥**

ஜன நடமாட்டமே இல்லாத, பயம் நிறைந்த காட்டிற்கு வந்திருக்கிறோம். என்னுடைய பணிவிடையை ஏற்பதற்காக இந்த பயங்கரமான காட்டிற்கு வந்திருக்கிறார்.

12. **பாணிக்ரஹண காலே ச யத்புரா த்வக்னி ஸன்னிதௌ ।**
**அநுசிஷ்டா ஜனன்யாஸ்மி வாக்யம் ததபி மேத்ருதம் ॥**

கன்யகாதான காலத்திலே அக்னி முன்பு **'சா யேவ அனுகத சதா'** என்று சொன்ன வார்த்தையின் படியும், தாய் கணவனைத் தொடர்ந்து செல் என்று சொன்ன வார்த்தையின் படியும் பின்பற்ற வேண்டியவளாய் இருக்கிறேன். அவை மனதில் உறுதி கொண்டு விட்டன.

(தொடரும்)

# ப்ரபோத சிந்தாமணி

*ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர்*

## 15. குருவின் பெருமை

நம் பாரதீய சம்ஸ்க்ருதியில் தந்தைக்கும் குருவிற்கும் ஒரு உயர்ந்த இடத்தைக் கொடுத்துள்ளனர். தாய் தந்தையின் அனுக்கிரகத்தினால் தான் நமக்கு இந்த பவித்ரமான மனித சரீரம் ஏற்பட்டுள்ளது. தாய் தந்தையின் கடனை யாரும் முழுதும் தீர்க்க முடியாது. ஆகையால் தான் வேதங்கள் **மாத்ரு தேவோ பவ । பித்ரு தேவோ பவ !** என்றும் தாய்-தந்தையரை கடவுளாக வணங்க வேண்டும் என்றும் உபதேசித்துள்ளது. தாய்-தந்தையரை சந்தோஷத்துடனும், சிரத்தையுடனும் பூஜித்துக் கௌரவிக்க வேண்டும்.

சத்குருவின் நிலை மிகவும் சிறப்பானது. நம்மைப் பரம கருணையுடன் சரியான சன்மார்க்கத்தில் நடத்திச் செல்லக் கூடியவரே குரு. நம்முள்ளில் இருக்கும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸர்யங்களை நாசம் செய்து நம்மை புனிதமாக்குபவரே குரு. மனிதனுக்குக் குறிக்கோளையும் மோட்சத்தின் மார்க்கத்தையும் தெரிவிப்பவரே குரு.

தந்தை நம் சரீர பந்தனத்திற்குக் காரணமாகிறார். ஆனால் குருவோ தேக பந்தனத்திலிருந்து விடுவிக்கிறார். அகங்காரம் மமகார ரூபமாகிய இந்த சம்சாரத்தில் விழவைப்பவன் தந்தையானால், ஆத்மஞான உபதேசத்தின் மூலம் நம்மை இந்த சம்சார சாகரத்தைத் தாண்ட வைப்பவரே குரு. குருவிற்கு மேலான ஒருவர் இந்த உலகம் முழுவதிலும் இல்லை. **ந குரோரதிகம் கிஞ்சித்.** ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர் முதலான அவதார புருஷர்களும் தங்கள் குருவான விச்வாமித்ரர், சாந்தீபனீ ஆகியவர்களுக்குச் சேவை செய்து குருவின் பெருமையை அறிவுறுத்தியுள்ளனர்.

ப்ரச்நோபநிஷத்தில் வரும் ஒரு கதை : ஆறு சிஷ்யர்கள் பிப்பலாதர் என்ற குருவை அணுகி அவரிடமிருந்து ஆத்ம ஞானத்தை அடைகின்றனர். கிருதார்த்த ராகிய அந்த ஆறு சிஷ்யர்களும் மிகவும் நன்றியுடன் குருவை **த்வம் ஹி ந: பிதாயோண்ஸ்மாகம் அவித்யாயா: பரம் பாரம் தாரயஸி,** நீர் தான் எங்களுக்கு உண்மையான தந்தை. ஏன் என்றால் நீர் தான் எம்மை அறியாமையாகிய கடலைக் கருணையுடன் தாண்ட வைத்துள்ளீர்' என்று போற்றிப் புகழ்ந்தார்கள். பார்த்தீர்களா குருவின் மகிமையை?

# மூக ஸாரம்

## இராமாயணம் ஸ்ரீநிவாஸன்

காஞ்சீ மடத்தை அலங்கரித்த **ஸ்ரீ மூக கவியி**னால் இயற்றப்பட்ட **மூக பஞ்சசதியை** எல்லாரும் அறிவர்.
காமாக்ஷியின் புகழை பல விதமாக அதில் கவி கூறியிருப்பார் புலமை சிறந்த கற்பனை வளம், உயர்ந்த பக்தி இலக்கியமாக மிளிர்கிறது **மூக பஞ்சசதி.**
அந்த ஐநூறு ஸ்லோகங்களிலிருந்து சில முக்யமான ஸ்லோகங்களை **'மூக ஸாரம்'** என்னும் தலைப்பில் மறைந்த **ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீநிவாசன்** தொகுத்து அருளியுள்ளார். பொருள் உணர்ந்து பாராயணம் செய்வோம்.

**वरीवर्तु स्थेमा त्वमि मम गिरां देवि मनसो**
**नरीनर्तु प्रौढा वदनकमले वाक्मलहरी।**
**चरीचर्तु प्रज्ञा जननि जडिमा न: परजने**
**सरीसर्तु स्वैरं जननि ममि कामाक्षि करुणा ।। ४८ ।।**

வரீவர்த்து ஸ்தேமா த்வயி மம கிராம் தேவி: மநஸோ
நரீநர்த்து ப்ரௌடா வதந கமலே வாக்யலஹரீ
சரீசர்த்து ப்ரக்ஞா ஜநநி ஜடிமா ந: பரஜநே
ஸரீஸர்த்து ஸ்வைரம் ஜநநி மயி காமாக்ஷி கருணா ।। 48 ।।

*(ஸ்துதி சதகம் 48)*

*அக்ஞானத்தை நீக்கி அறிவை அநுக்ரஹிக்கும் தேவியான காமாக்ஷியே! உன்னிடம் எனது மனது ஸ்திரமாக ஊன்றியிருக்கவும், கம்பீரமான வாக் ப்ரவாஹம் வளரவும், எதிரிகளிடம் அக்ஞானம் நடமாடவும் கருணாப்பரவாஹம் என்னிடம் பரவவும் நீ அநுக்ரஹிப்பாயாக.*

**परा विद्या हृद्याश्रितमदनविद्या मरकत–**
**प्रभानीला लीलापरवशितशूलायुधमनाः।**
**तमः पूरं दूरं चरणनतपौरंदरपुरी–**
**मृगाक्षी कामाक्षी कमलतरलाक्षी नयतु मे ।। ५६ ।।**

பராவித்யா ஹ்ருத்யாச்ரித மதனவித்யா மரகத-
ப்ரபா நீலா லீலா பரவஶித ஶூலாயுத மனா: ।
தம: பூரம் தூரம் சரணநத பௌரந்தர புரீ-
ம்ருகாக்ஷீ காமாக்ஷீ கமல தரலாக்ஷீ நயது மே ॥ 56 ॥

*(ஸ்துதி சதகம் 56)*

*உத்கிருஷ்ட ஸ்ரீவித்யாஸ்வரூபணியும், காமவித்யா ச்ரிதையும், பரமசிவமனஸ்ஸை வசப்படுத்தியவளும், தேவ ஸ்திரீகளால் நமஸ்கரிக்கப்பட்ட திருவடியை உடையவளுமான காமாக்ஷீ தேவி எனது பாபஸமூஹத்தைத் துரத்தியடிக்கட்டும்.*